තිරසර සංවර්ධන, වනජීවී හා ප්‍රාදේශීය සංවර්ධන අමාත්‍යාංශය
**ජාතික උද්භිද උද්‍යාන දෙපාර්තමේන්තුව**
வலுவாதார அபிவிருத்தி, மற்றும் வனசீவராசிகள்
பிராந்திய அபிவிருத்தி அமைச்சு
தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்
**Ministry of Sustainable Development, Wildlife and Regional Development**
**Department of National Botanic Gardens**

# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව 2017
# வருடாந்த முன்னேற்ற அறிக்கை 2017
# Annual Performance Report 2017

**ජාතික උද්භිද උද්‍යාන දෙපාර්තමේන්තුව, තැ.පෙ.14, පේරාදෙණිය**
தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம், த.பெ.14, பேராதனை.
**Department of National Botanic Gardens, P.O. B. 14, Peradeniya**

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

# வருடாந்த முன்னேற்ற அறிக்கை
# 2017

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்
த.பெ.14, பேராதனை.

# உள்ளடக்கம்


1. அறிமுகம் 04
2. 2017 ம் ஆண்டின் முன்னேற்றம் 11
3. வருமானம் 13
4. நிதி முன்னேற்றம் 14
5. 2017 ம் ஆண்டில் தாவரவியல் பூங்காக்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் 19
6. திணைக்களத்தின் கீழான ஏனைய அலகுகளின் முகாமை 37
7. 2017 ம் ஆண்டில் இடம்பெற்ற பதவி உருவாக்கம், ஆட்சேர்ப்பு, இட மற்றம், ஏனைய விடயங்கள் 39
8. பணியாளர் பயிற்சி மற்றும் இயலுமை விருத்தி 40
9. 2018ம் ஆண்டுக்கான எதிர்காலத் திட்டங்கள் 42

# தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

## 1. அறிமுகம்

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களமானது, தாவரவியல் நடவடிக்கைகள் தொடர்பிலான இலங்கையின் முன்னோடி நிறுவனமாகும். தாவர வெளிவாரிப் பேணுகை, தாவரங்கள் குறித்த கல்விச் செயற்பாடுகள், இலங்கையில் அலங்காரப் பூங்காவியலை ஊக்குவிப்பதற்கான ஆய்வு ரீதியான மற்றும் தொழில்நுட்ப ரீதியான நிகழ்ச்சித் திட்டங்கள், பூச்செடியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளுக்கு பெரும் பங்களிப்பினைச் செய்வதோடு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாகவும் திகழ்கிறது.

பிரித்தானியர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பிரதான பூங்காக்களான பேராதனை அரச தாவரவியல் பூங்கா (1821), ஹக்கல தாவரவியல் பூங்கா (1861), கம்பஹா, ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா (1876) மற்றும் கனேவத்த மூலிகைத் தாவரப் பூங்கா ஆகியவற்றோடு முறையே 2013, 2015 ம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட அம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்கா மற்றும் அவிசாவலை சீதாவக ஈர வலய தாவரவியல் பூங்கா ஆகியன பொது மக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற தாவரவியல் பூங்காக்களில் 4500 க்கும் மேற்பட்ட தாவரவகைகள் பேணப்படுவதோடு அரிய வகைத் தாவரங்கள், காடுகளிலிருந்து அழிந்து போயுள்ள தாவரங்கள் இலங்கைக்கு மாத்திரம் உரிய தாவரங்கள், அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்கள் ஆகியன பாதுகாக்கப்பட்டுள்ளன. அத்தோடு கனேவத்த மூலிகைத் தாவரப் பூங்கா இலங்கையின் மூலிகைத் தாவரங்களின் பாதுகாப்புக்கும் பரவுகைக்கும் பங்களிப்புச் செய்கின்றது.

தேசிய தாவரக்கயமானது தாவரவியல் மற்றும் தாவர வகைப்படுத்தல் குறித்த ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்பாடுகளையும் மேற்கொள்வதோடு தாவரங்கள் குறித்த பல்வேறு தீர்மானங்களையும் உண்மைத்தன்மையை சான்றுப்படுத்தும் பணிகளையும் மேற்கொள்கின்றது. பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகானது பூச்செடிச் செய்கை ஆய்வுகளில் ஈடுபடுவதன் மூலம் நாட்டில் பூச்செடிச் செய்கையை ஊக்குவிக்கும் பணியை மேற்கொள்கின்றது. இத்திணைக்களத்தின் கல்வி மற்றும் பயிற்சி நிலையமானது, குறுங்கால கற்கை நெறிகள், 1 வருட மற்றும் 2 வருட டிப்ளோமா கற்கை நெறிகள் ஆகியனவற்றை வழங்குகின்றது.

தாவரவியல் பூங்காக்களானவை, பொது மக்களுக்கு ஓய்வெடுத்தலுக்கான வசதிகளை வழங்குவதோடு, உலகின் பல பகுதிகளிலிருந்தும் தருவிக்கப்பட்ட அதன் தாவரங்கள் தாவர இராச்சியத்தின் அழகையும் பன்மைத்துவத்தையும் பறை சாற்றுகின்றன. அத்தோடு தாவரப் பேணுகை, உயிரியல் பல்வகைமை, பூச்செடிச் செய்கை பற்றிய அறிவையும் பகிர்கின்றது

### 1.1 . நோக்கு

தாவரவியல் மற்றும் அழகியல் நடவடிக்கைகளை உயர் மட்டத்தில் பேணிக்கொண்டு அயன வலயத்தின் மிகச் சிறந்த தாவரவியல் பூங்காவாக மாறுதல்.

### 1.2. பணி

இயற்கையான மற்றும் செயற்கையான சூழல்களில் காணப்படும் தாவர வளங்கள் பற்றி ஆய்வு செய்தல், அவற்றின் நிலையான பேணுகை மற்றும் அவற்றின் மதிப்பை அறிந்து கொள்ளும் பணிகளுக்காக பொது மக்களுக்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதோடு அவர்களை தாவரங்கள் பால் சமீபமாக்குதல்.

## 1.3 திணைக்களத்தின் பிரதான பணிகள்

1. இலங்கையின் தாவரவியல் பல்வகைத் தன்மையினை பாதுகாப்பதில் வெளிவாரிப் பாதுகாப்பு முறைகளை செயல்வலுப் பெறச் செய்வதற்குத் தேவையான திட்டங்களை வகுத்தலும் செயல்படுத்தலும்

2. கல்வி மற்றும் தொடர்பாடல் முறைகளை பயன்படுத்தி இலங்கையின் தாவர வளங்கள் சம்பந்தமாகவும் தாவர வளங்களுடன் தொடர்புற்றுக் காணப்படும் பல்வேறு வகையான கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் சரியான தகவல்களையும் கலையறிவினையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

3. இலங்கையில் பூச்செடிச் செய்கைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான பல்வேறு ஆராய்ச்சிகள் மற்றும் தொழில் நுட்ப முறைகளை பரீட்சித்தலும் செயல்படுத்துதலும்.

4. இலங்கையின் தேசிய தாவரவியல் பூங்காக்களை உயர்தரத்தில் பராமரித்துப் பேணல்.


5. பொருத்தமான இடங்களில் புதிய தாவரவியல் பூங்காக்களை உருவாக்குவதற்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தலும் செயல்படுத்தலும்

6. அலங்கார தாவரவியல் ஆய்வினை இலங்கையில் விஸ்தரிப்பதற்குத் தேவையான ஆராய்ச்சிகள் மற்றும் தொழில்நுட்ப வேலைத்திட்டங்களை அமுலாக்குதல்.

7. இலங்கையின் அடையாளம் காணப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் மிக்க தாவரங்களை பாதுகாப்பதற்குத் தேவைப்படும் தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.

8. அநுராதபுரம் புனித அரச மரத்தின் ஆரோக்கியத்தைப் பேணுதல்.

## 1.4 நிறுவனக் கட்டமைப்பு



## 1.5 பணியாளர்கள் பற்றிய விபரம்

திணைக்களத்துக்கான அனுமதிக்கப்பட்ட மொத்தப் பணியாளர் எண்ணிக்கை 974 ஆகும். 2017.12.31 ம் திகதிக்கு 630 பேர் பணியில் ஈடுபட்டுள்ளனர். அது பற்றிய சாராம்சம் வருமாறு:

### 1.5.1 2017.12. 31ம் திகதிக்கு திணைக்களத்தின் பணியாளர் எண்ணிக்கை பற்றிய விபரம்

| சேவை வகை | சம்பள முறைமை | சேவை / பதவி | அனுமதிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | SL - 3<br>SL - 1 | இ.வி.சே.<br>இ.நி.சே.<br>இ.கண.சே.<br>இ.திட். சே.<br>இ.பொறி.சே.<br>இ.க.க.சே. | 34 | 16 |
| மூன்றாம் நிலை | MN – 7<br><br>MN – 6 | நிர்வாக அலுவலர்<br>இ.தொ.நு.சே./ விஷேச தரம்<br>மொழிபெயர்ப்பாளர் | 10 | 04 |
| இரண்டாம் நிலை | MN – 4<br><br><br>MN – 3<br><br><br><br><br>MN – 2<br>MN – 1<br>MT – 1 | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்<br>அபிவிருத்தி அலுவலர்<br>விவசாய நடவடிக்கை அலுவலர்<br>விவசாய ஆலோசகர்<br>பூங்கா அபிவிருத்தி உதவியாளர்<br>ஆய்வு உதவியாளர்<br>செவிப்புல, கட்புல உதவியாளர்<br>தொழில்நுட்ப அலுவலர்<br>அரச முகாமைத்துவ சேவை<br>கட்டண அறவீட்டு உதவியாளர்<br>தகவல் தொழில் நுட்ப உதவியாளர்<br>பூங்கா வேலை மேற்பார்வையாளர்<br>பூங்கா நடத்துனர் | 189 | 130 |
| ஆரம்ப நிலை | PL – 3<br>PL – 2<br>PL – 1 | தேர்ச்சி பெற்ற<br>பகுதி தேர்ச்சி பெற்ற<br>தேர்ச்சி அற்ற | 741 | 480 |
| **மொத்தம்** | | | **974** | **630** |

### 1.5.2. திணைக்களத்தின் பிரதான பணிமனையின் சிரேஷ்ட நிலை அலுவலர்கள்

| பதவி | அலுவலர் பெயர் |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் | திரு. கே. என். யாபா |
| பணிப்பாளர் (அபிவிருத்தி) | திருமதி. எச். சீ. பீ. ஜயவீர |
| பணிப்பாளர் (நிர்வாகம்) | திருமதி. ஐ. டபிள்யு. எம். சீ. கே. இலங்ககோன் |
| பிரதம கணக்காளர் | திரு. டபிள்யு. டீ. யூ. டீ மெல் |
| பிரதம உள்ளக கணக்காய்வாளர் | திருமதி. என். டீ. லியனகே |
| கணக்காளர் | திரு. டீ. எம். வீரசேகர |
| சிவில் பொறியியலாளர் | திரு. ஏ. எல். எம். மாஹிர் |
| உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) | திரு. வை. எம். வை. யாபா பண்டார |
| உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | திரு. எச். ஜீ. ஜயசேகர |
| நிர்வாக அலுவலர் | திருமதி. எச். ஆர். எம். ஏ. எம். ரத்நாயக |

### 1.5.3. திணைக்களத்தின் உப அலுவலகங்களது சிரேஷ்ட நிலை அலுவலர்கள்

| பதவி | அலுவலர் பெயர் |
|---|---|
| பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் தொழில் நுட்ப மாற்றீடு) - பூச்செடியியல் அபிவிருத்தி அலகு | கலாநிதி, செல்வி. ஷெலோமி ஏ. கிருஷ்ணராஜா |
| பிரதிப் பணிப்பாளர் - அரச தாவரவியல் பூங்கா | கலாநிதி, திருமதி. ஏ.எம்.ஏ.எஸ். அத்தநாயக |
| பிரதிப் பணிப்பாளர் - பூச்செடியியல் ஆய்வு அலகு | திரு. எம்.எம்.டீ.ஜே. சேனாரத்ன |
| உதவிப் பணிப்பாளர் - கம்பஹா தாவரவியல் பூங்கா | திருமதி. எம்.சீ. விக்ரமசிங்ஹ |
| உதவிப் பணிப்பாளர் - நாரஹேன்பிட உ. ப. அலுவலகம் | திருமதி. ஆர்.எஸ்.டபிள்யு. கோமஸ் |
| பிரதிப் பணிப்பாளர் - தேசிய தாவரக்கயம் | கலாநிதி, திருமதி. ஆர்.ஏ.எஸ்.டபிள்யு. ரணசிங்ஹ |
| உதவிப் பணிப்பாளர் - சீதாவக ஈரவலய தா. பூங்கா | திரு. பீ.டீ.எஸ். விஜேரத்ன |

## 1.6 இத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்களும் அலகுகளும்

### அரச தாவரவியல் பூங்கா, பேராதனை

1821ல் நிறுவப்பட்ட பேராதனை, அரச தாவரவியல் பூங்காவானது தாவரப் பேணுகை, மக்களுக்குக் கல்வியூட்டல் மற்றும் இலங்கையின் பொருளாதார, சூழலியல் அபிவிருத்திப் பணிகளுக்குப் பெரும் பங்காற்றுகின்றது.

கண்டி நகருக்கு அண்மையில் 61.25 ஹெக்டெயார் நிலப்பரப்பில் அமைந்துள்ள இப்பூங்காவானது, கல்வி, தாவரவியல் ஆய்வு, சூழலியல் மற்றும் அலங்காரப் பூங்காவியல் நிலையமாகவும் மக்களுக்கு ஓய்வளிக்கும் இடமாகவும் திகழ்கின்றது.

### தேசிய தாவரக்கயம்

இலங்கையின் தாவரங்களின் உலர்ந்த தாவரக்கய மாதிரிகளை பாதுகாத்து வைக்கும் இடமே தேசிய தாவரவக்கயமாகும். இங்கு 160,000 க்கும் அதிகமான தேசிய மற்றும் வெளிநாட்டுத் தாவரங்களின் மாதிரிகள் முறையாக, ஆய்வுகளுக்கும் பரிசோதனைளுக்குமெனப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு தாவரங்கள் பற்றிய 3500 க்கும் மேற்பட்ட புத்தகங்களும் சஞ்சிகைகளும் இதன் நூலகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

தாவரக்கயத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள மாதிரிகள் தாவர வகைப்படுத்தல் ஆய்வுகளுக்காகவும் உயிரினப் பல்வகைமைத் தரவு வங்கியொன்றாக தாவரங்களை அடையாளம் காணும் பணிகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

### ஹக்கல தாவரவியல் பூங்கா, ஹக்கல

ஹக்கல தாவரவியல் பூங்கா 1861 இல் உருவாக்கப்பட்டது. இப்பூங்காவின் தாவரங்கள் உப அயன வலயத்துக்குரியவையாகும். இங்கு உள்நாட்டுத் தாவரங்கள், மலைத் தாவரங்கள், ஏனைய உப அயன வலய நாடுகளிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட தாவரங்கள் ஆகியன முறையாக நடப்பட்டுள்ளன.

### ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா - கம்பஹா

கம்பஹா, ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா 1876ல் றப்பர் பயிர்ச் செய்கையை இலங்கையில் ஊக்குவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது. 17.4 ஹெக்டெயார் பரப்பைக் கொண்ட இப்பூங்கா வளமான வரலாற்றைக் கொண்டதும் தாவரவியல் மற்றும் அலங்காரப் பூச்செடியியல் கவர்ச்சியைக் கொண்டதுமாகும். இது இலங்கையையும் வெளிநாடுகளையும் சேர்ந்த 2000 த்துக்கும் அதிகமான தாவர வகைகளைக் கொண்டு காணப்படுகின்றது.

### பூச் செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு, பேராதனை.

பூச்செடிச் செய்கைத் துறையோடு தொடர்பான ஆய்வுகளைச் செய்து இலங்கையின் பூச்செடிச் செய்கைத் துறையின் அபிவிருத்திக்குப் பங்களிப்பது இவ்வலகின் பணியாகும்.

பயிற்சி நிகழ்ச்சிகளையும் கள ஆலோசனைகளையும் இத்துறையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்கள் குறித்த தகவல்களை வழங்குவதிலும் பொருட்கள், உபகரணங்கள், தரமான உற்பத்தி சாதனங்கள் ஆகியனவற்றை பூ வளர்ப்போருக்கு வழங்குவதிலும் மாவட்ட மட்டத்தில் பூ வளர்ப்போர் சங்கங்களை அமைத்து அத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பதிலும் இப்பிரிவு முனைப்போடு ஈடுபடுகின்றது.

**மூலிகைப் பூங்கா, கனேவத்த**

இப்பூங்காவானது வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ளது. 21.04 ஹெக்டெயார் பரப்புக் கொண்ட இப்பூங்காவில் பல வகைகளையும் சார்ந்த மூலிகைகள் பயிரிடப்பட்டுள்ளன.

இலகுவில் பெற்றுக் கொள்ள முடியாத, அரிய மூலிகைகளை பேணிப்பாதுகாப்பதும் மருந்து மூலிகைகளை முறையாக வளர்த்துச் சேமிப்பதும் இப்பூங்காவின் நோக்கங்களாகும். அத்தோடு மூலிகை விற்பனையிலும் முறையான மூலிகை வளர்ப்புப் பற்றிய அறிவை வழங்குவதிலும் இது ஈடுபடுகிறது.

**உலர் வலய தாவரவியல் பூங்கா, மிரிஜ்ஜவில, அம்பாந்தோட்டை**

இப்பூங்காவானது 130 வருடங்களுக்குப் பிறகு உள்நாட்டு நிபுணர்களால் வடிவமைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது பூங்காவாகும். இது தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மிரிஜ்ஜவில பகுதியில் அமைந்துள்ளது. 2006ம் ஆண்டில் இதன் அபிவிருத்திப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2013ம் ஆண்டு பொதுமக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

உலர் மற்றும் அதி உலர் வலயத் தாவரங்களை வெளிவாரிப் பேணுகை முறைமையின் கீழ் பாதுகாப்பதும் உள் நாட்டுப் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பதும் இதன் பிரதான குறிக்கோளாகும்.

**சீத்தாவாக்கை ஈரவலய தாவரவியல் பூங்கா**

அவிசாவலைக்கு அண்மையில் அமைந்துள்ள இதன் அபிவிருத்திப் பணிகள் 2008ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2015ம் ஆண்டு மார்ச் மாதம் திறந்து வைக்கப்பட்டது. இது 42.49 ஹெக்டெயார் பரப்பளவைக் கொண்டது.

ஈர வலய தாழ் நிலத் தாவரங்களை வெளிவாரிப் பேணுகை முறை மூலம் பாதுகாப்பது இதன் பிரதான குறிக்கோளாகும்.

**சுவஹஸ் மல் செவன, கொழும்பு**

நாரஹேன்பிடவில் அமைந்துள்ள இவ்வலகானது, இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இயங்கும் ‘சுவஹஸ்மல்’ சங்கங்களின் அங்கத்தவர்களால் உற்பத்தி செய்யப்படும் பூச்செடியியல் உற்பத்திகளை சந்தைப்படுத்துதல் மற்றும் தொழில்நுட்பப் பரிவர்த்தனை ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

**அதி மேதகு ஜனாதிபதி மற்றும் மாண்பு மிகு பிரதமர் ஆகியோரது வாசஸ்தலப் பூங்காக்கள்**

அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் கொழும்பு, கண்டி, நுவரெலியா, அனுராதபுர வாசஸ்தலங்களின் பூங்காக்கள் மற்றும் மாண்பு மிகு பிரதமர் அவர்களின் கொழும்பு மற்றும் நுவரெலியா வாசஸ்தலங்களின் பூங்காக்கள் இத்திணைக்களத்தால் நிர்வகிக்கப்படுகின்றன.

**பொதுநலவாய போர் சமாதிகள்**

பொது நலவாய போர் சமாதிகள் கண்டி, ஜாவத்தை, பொரல்ல மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் இரண்டு உலகப் போர்களிலும் இறந்த பொது நலவாய நாடுகளின் போர் வீரர்களை நினைவு கூரும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளன. இவை இத்திணைக்களத்தாலேயே நிர்வகிக்கப்படுகின்றன.

**பசுமை நிலையம், மீகல்லாவ**

மீகல்லாவ பசுமை நிலையமானது வடமேல் மாகாணத்தில், குருனாகலை மாவட்டத்தில் அமைந்துள்ளது. தற்போது 2.43 ஹெக்டெயார் விஸ்தீரணம் கொண்டது. அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்ற இந்நிலையமானது பூச்செடியியல் துறையில் இத்திணைக்களத்தின் உள்ளகப் பணியாளர்களுக்கும் பிரதேசப் பொதுமக்களுக்குமான பயிற்சி வழங்குவதற்கும் தாவர உற்பத்தி செய்தற்குமான நிலையமாக செயற்படவுள்ளது.


## 2. தாவரவியல் பூங்காக்களுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் வருமானம் பற்றிய தகவல் - 2017

### 2.1 சுற்றுலாப் பயணிகளின் வருகை


2017ம் ஆண்டில் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் அனைத்து அலகுகளும் உயர் தரத்தில் பேணப்பட்டன.

இவ்வருடத்தில் பூங்காக்களைப் பார்வையிட வருகை தந்த மொத்தப் பார்வையாளர்கள் எண்ணிக்கை 2,837,554 ஆகும். இவர்களுள் 2,397,347 உள்நாட்டவர்களும் 440,207 வெளிநாட்டவர்களும் அடங்குகின்றனர்.

### 2. 2 2017ம் ஆண்டில் பூங்காக்களைப் பார்வையிட வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை




பூங்காக்களைப் பார்வையிட வருகை தந்த உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை




**2016, 2017ம் ஆண்டுகளில் பூங்காக்களைப் பார்வையிட வருகை தந்த உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் ஒப்பீடு**

## 2.3. 2013ம் ஆண்டு முதல் 2017ம் ஆண்டு வரை தாவரவியல் பூங்காக்களுக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை பற்றிய தகவல்

| விபரம் | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
| உள்நாட்டுப் பார்வையாளர்கள் | 1,783,069 | 1,893,522 | 2,215,702 | 2,593,252 | 2,397,347 |
| வெளிநாட்டுப் பார்வையாளர்கள் | 293,454 | 345,468 | 407,553 | 465,405 | 440,207 |
| மொத்தம் | **2,076,523** | **2,238,990** | **2,623,255** | **3,058,657** | **2,837,554** |

## 2.4. 2017ம் ஆண்டு பூங்காக்களைப் பார்வையிட வந்த சுற்றுலாப் பயணிகள் பற்றிய விபரம்

| பார்வையாளர் எண்ணிக்கை | பேராதனை | ஹக்கல | கம்பஹா | மிரிஜ்ஜவில | சீதாவக | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| உள்நாடு - வளர்ந்தோர் | 823,715 | 578,629 | 172,642 | 41,544 | 163,460 | 1,779,990 |
| உள்நாடு - சிறுவர்கள் | 276,517 | 221,274 | 19,556 | 29,363 | 32,610 | 579,320 |
| சிரேஷ்ட பிரஜைகள் | 12,264 | 16,898 | 736 | 2,796 | 5,343 | 38,037 |
| மொத்த உள்நாட்டுப் பார்வையாளர் | 1,112,496 | 816,801 | 192,934 | 73,703 | 201,413 | 2,397,347 |
| வெளிநாடு - வளர்ந்தோர் | 386,141 | 16,898 | 315 | 138 | 184 | 403,676 |
| வெளிநாடு - சிறுவர்கள் | 19,958 | 23,814 | 12 | 9 | 5 | 43,798 |
| வெளிநாடு - மாணவர்கள் | 6,561 | 1,860 | 6 | 6 | 14 | 8,447 |
| மொத்த வெளிநாட்டுப் பார்வையாளர் | 412,660 | 26,858 | 333 | 153 | 203 | 440,207 |
| மொத்தப் பார்வையாளர்கள் | 1,525,156 | 843,659 | 193,267 | 73,856 | 201,616 | 2,837,554 |


# 3. வருமானம்

2017ம் ஆண்டில் நுழைவுக் கட்டணம், தாவர விற்பனை என்பன மூலம் திணைக்களம் பெற்றுக்கொண்ட மொத்த வருமானம் 849 மில்லியன் ரூபாய்களாகும். (பார்வையாளர்கள் மூலம் 753 மில்லியன் ரூபாய்களும் தாவர விற்பனை மற்றும் ஏனைய வருமானங்கள் மூலம் 96 மில்லியன் ரூபாய்களும் வருமானமாகப் பெறப்பட்டன.) கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது **8%** (784.4 மில்லியன் ரூபாய்கள்) அதிகரிப்பாகும்.

## 3.1. 2013ம் ஆண்டு முதல் 2017ம் ஆண்டு வரை சுற்றுலாப் பயணிகள் மூலம் மாத்திரம் திணைக்களத்துக்குக் கிடைத்த மொத்த வருமானம்.

| விபரம் | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | **2013** | **2014** | **2015** | **2016** | **2017** |
| உள்நாட்டுப் பார்வையாளர்கள் மூலம் கிடைத்த வருமானம் (ரூ. மில்.) | 73 | 75.9 | 88.5 | 115.4 | 113 |
| வெளிநாட்டுப் பார்வையாளர்கள் மூலம் கிடைத்த வருமானம் (ரூ. மில்.) | 314.9 | 369.8 | 435.1 | 594.3 | 640 |
| மொத்தம் (ரூ. மில்.) | **387.9** | **445.7** | **523.6** | **709.7** | **753** |

### 3.2. 2017ம் ஆண்டு தாவரவியல் பூங்காக்கள் / அலகுகளது மாதாந்த வருமானம் (ரூ. மில்.)




## 4. நிதி முன்னேற்றம்

பிரதான பூங்காக்களிலும் ஏனைய அலகுகளிலும் அபிவிருத்திப் பணிகள் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்பட்டதோடு 2017ம் ஆண்டிற்கான திணைக்களத்தின் நிதி முன்னேற்றம் 99% ஆகும்.

### 4.1. 4.1. 2017ம் ஆண்டின் ஒதுக்கீடு, செலவு மற்றும் முன்னேற்றம்

| விபரம் | மொத்த ஒதுக்கீடு (ரூ. மில்.) | மொத்தச் செலவு (ரூ. மில். ) | வீதம் |
|---|---|---|---|
| மூலதனச் செலவு ஒதுக்கீடு | 300.05 | 297.36 | 99.1 |
| மீண்டெழும் செலவு ஒதுக்கீடு | 364.69 | 358.28 | 98.2 |
| மொத்தம் | 664.74 | 655.64 | 98.6 |

## 4.2. 2017ம் ஆண்டு திணைக்களத்திற்கு ஒவ்வொரு செயற்திட்டத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன ஒதுக்கீடு மற்றும் செலவு

| நிகழ்ச்சித் திட்டம் | 2017ம் ஆண்டுக்கான அரசின் ஒருங்கிணைந்த ஒதுக்கீடு (ரூ.மில்) | 2017ம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஒதுக்கீட்டின் செலவு (ரூ.மில்) | 2017 ம் ஆண்டு தாவாரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்தின் ஒதுக்கீடு (ரூ.மில்) | 2017 ம் ஆண்டு தாவாரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதிய ஒதுக்கீட்டிலிருந்து செய்யப்பட்ட செலவு (ரூ.மில்) | 2017ம் ஆண்டுக்கான மொத்த ஒதுக்கீடு (ரூ.மில்) | மொத்தச் செலவு (ரூ.மில்) | வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| பேராதனை, அரச தாவரவியல் பூங்கா அபிவிருத்தி | 2.579 | 2.560 | 28.310 | 28.195 | 30.889 | 30.755 | 99.6 |
| தாவரவியல் பூங்கா அபிவிருத்தி, கம்பஹா | 16.55 | 15.334 | 17.250 | 17.232 | 33.80 | 32.566 | 96.3 |
| தாவரவியல் பூங்கா அபிவிருத்தி, ஹக்கல | 3.941 | 3.929 | 35.911 | 35.890 | 39.852 | 39.819 | 99.9 |
| மூலிகைப் பூங்கா அபிவிருத்தி, கனேவத்த | 9.25 | 9.236 | 0.710 | 0.707 | 9.960 | 9.943 | 99.8 |
| மீகல்லாவ பசுமை இல்ல பயிற்சி நிலைய அபிவிருத்தி | 6 | 5.982 | 0.0 | 0.0 | 6 | 5.982 | 99.7 |
| கல்வி மற்றும் பயிற்சி | 0.5 | 0.496 | 2.250 | 2.247 | 2.750 | 2.743 | 99.7 |
| தாவரக்கயம் மற்றும் தாவர வகைப்படுத்தல் ஆய்வு | 0.0 | 0.0 | 4.850 | 4.841 | 4.850 | 4.841 | 99.8 |
| தேசிய பூச்செடியியல் அபிவிருத்தி | 10 | 9.985 | 24.626 | 24.612 | 34.626 | 34.597 | 99.9 |
| ஈர வலய தாவரவியல் பூங்கா, அவிசாவலை | 25.45 | 25.260 | 2.403 | 2.403 | 27.853 | 27.663 | 99.3 |
| உலர் வலய தாவரவியல் பூங்கா, அம்பாந்தோட்டை | 74.2 | 73.205 | 0.0 | 0.0 | 74.20 | 73.205 | 98.7 |
| பிரதான பணிமனை அபிவிருத்தி நடவடிக்கைகள் | 1.58 | 1.572 | 33.690 | 33.671 | 35.270 | 35.243 | 99.9 |
| **மொத்தம்** | **150.05** | **147.559** | **150.0** | **149.798** | **300.05** | **297.357** | **99.1** |

## 4.3. மீண்டெழும் ஒதுக்கீடுகள் மற்றும் செலவுகள் - 2017

| விடயக் குறியீடு | விபரம் | 2017 க்கான ஒதுக்கீடு (ரூ.) | 2017 நிகர செலவு (மேலதிக தொகையைக் கழித்த பின்னர்) (ரூ.) | மீதமுள்ள ஒதுக்கீடு (ரூ.) | மொத்தச் செலவு ஒதுக்கீட்டின் % மாக |
|---|---|---|---|---|---|
| | ஆட்களுக்கான கொடுப்பனவுகள் | **300,500,000.00** | **294,284,298.37** | **6,215,701.63** | **97.9%** |
| 1001 | சம்பளங்களும் வேதனங்களும் | 162,200,000.00 | 160,227,973.78 | 1,972,026.22 | 98.8% |
| 1002 | மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 8,300,000.00 | 8,295,440.12 | 4,559.88 | 99.9% |
| 1003 | வேறு கொடுப்பனவுகள் | 130,000,000.00 | 125,760,884.47 | 4,239,115.53 | 96.7% |
| | பிரயாணச் செலவுகள் | **2,180,000.00** | **2,177,689.60** | **2,310.40** | **99.9%** |
| 1101 | உள்நாடு | 1,700,000.00 | 1,700,000.00 | - | 100.0% |
| 1102 | வெளிநாடு | 480,000.00 | 477,689.60 | 2,310.40 | 99.5% |
| | வழங்கல்கள் | **11,773,000.00** | **11,751,528.58** | **21,471.42** | **99.8%** |
| 1201 | காகிதாதிகளும் அலுவலகத் தேவைகளும் | 1,100,000.00 | 1,098,845.43 | 1,154.57 | 99.9% |
| 1202 | எரிபொருள் | 5,673,000.00 | 5,652,714.50 | 20,285.50 | 99.6% |
| 1203 | உணவு, பானம், சீருடை | 500,000.00 | 499,994.26 | 5.74 | 100.0% |
| 1205 | வேறு | 4,500,000.00 | 4,499,974.39 | 25.61 | 100.0% |
| | இயக்கச் செலவு | **3,150,000.00** | **3,128,783.54** | **21,216.46** | **99.3%** |
| 1301 | வாகனம் | 2,200,000.00 | 2,189,726.73 | 10,273.27 | 99.5% |
| 1302 | இயந்திரம், உபகரணம் | 600,000.00 | 589,061.19 | 10,938.81 | 98.2% |
| 1303 | கட்டிடம், கட்டமைப்பு | 350,000.00 | 349,995.62 | 4.38 | 100.0% |
| | சேவைகள் | **45,567,000.00** | **45,423,757.35** | **143,242.65** | **99.7%** |
| 1401 | போக்குவரத்து | 1,550,000.00 | 1,548,804.00 | 1,196.00 | 99.9% |
| 1402 | தபால், தொலைத்தொடர்பு | 2,820,000.00 | 2,819,923.35 | 76.65 | 100.0% |
| 1403 | மின்சாரம், நீர் | 5,000,000.00 | 4,858,306.66 | 141,693.34 | 97.2% |
| 1404 | வரி, வாடகை, உள்ளூராட்சி வரி | 277,000.00 | 276,723.34 | 276.66 | 99.9% |
| 1405 | வேறு | 35,920,000.00 | 35,920,000.00 | - | 100.0% |
| | மாற்றல்கள் | **1,520,000.00** | **1,511,464.70** | **8,535.30** | **99.4%** |
| 1506 | ஆதனக் கடன் வட்டி | 1,520,000.00 | 1,511,464.70 | 8,535.30 | 99.4% |
| **மொத்தம்** | | **364,690,000.00** | **358,277,522.14** | **6,412,477.86** | **98.2%** |

## 4.4. மூலதன ஒதுக்கீடுகள் மற்றும் செலவுகள் - 2017

| உபசெயற்திட்டம் | விடயக் குறியீடு | விடய விபரம் | 2017 க்கான ஒதுக்கீடு (ரூ.) | 2017 க்கான நிகர செலவு (மேலதிக தொகையைக் கழித்த பின்னர்) (ரூ.) | மீதமுள்ள ஒதுக்கீடு (ரூ.) | மொத்தச் செலவு ஒதுக்கீட்டின் % மாக |
|---|---|---|---|---|---|---|
| | | **மூலதனச் சொத்துக்களைப் புனரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்** | **4,100,000.00** | **4,072,715.66** | **27,284.34** | **99.3%** |
| 0 | 2001 | கட்டிடம், கட்டமைப்பு | 3,000,000.00 | 2,986,456.23 | 13,543.77 | 99.5% |
| 0 | 2002 | இயந்திரம், உபகரணம் | 600,000.00 | 596,037.38 | 3,962.62 | 99.3% |
| 0 | 2003 | வாகனம் | 500,000.00 | 490,222.05 | 9,777.95 | 98.0% |
| | | **மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளல்** | **4,000,000.00** | **3,988,673.85** | **11,326.15** | **99.7%** |
| 0 | 2102 | தளபாடம், அலுவலக உபகரணம் | 800,000.00 | 795,420.00 | 4,580.00 | 99.4% |
| 0 | 2103 | இயந்திரம், உபகரணம் | 500,000.00 | 493,258.39 | 6,741.61 | 98.7% |
| 0 | 2104 | கட்டிடம், கட்டமைப்பு | 2,700,000.00 | 2,699,995.46 | 4.54 | 100.0% |
| 0 | 2201 | மூலதன மாற்றுகை அரச நிறுவனங்கள் (நம்பிக்கை நிதியம்)[1] | 150,000,000.00 | 149,797,566.10 | 202,433.90 | 99.9% |
| 0 | 2401 | இயலுமை விருத்தி, பணியாளர் பயிற்சி | 500,000.00 | 495,900.00 | 4,100.00 | 99.2% |
| | | **விசேட செயற்திட்டங்கள்** | | | | |
| | | கம்பஹா தாவரவியல் பூங்கா & கனேவத்த மூலிகைப் பூங்கா அபிவிருத்தித் திட்டம் | **25,800,000.00** | **24,569,671.49** | **1,230,328.51** | **3.88** |
| 1 | 2102 | தளபாடம், அலுவலக உபகரணம் | 1,000,000.00 | 982,099.68 | 17,900.32 | 98.2% |
| 1 | 2103 | இயந்திரம், உபகரணம் | 1,600,000.00 | 1,596,162.95 | 3,837.05 | 99.8% |

| உபசெயற்திட்டம் | விடயக் குறியீடு | விடய விபரம் | 2017 க்கான ஒதுக்கீடு (ரூ.) | 2017 க்கான நிகர செலவு (மேலதிக தொகையைக் கழித்த பின்னர்) (ரூ.) | மீதமுள்ள ஒதுக்கீடு (ரூ.) | மொத்தச் செலவு ஒதுக்கீட்டின் % மாக |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2104 | கட்டிடம், கட்டமைப்பு | 12,400,000.00 | 11,193,181.95 | 1,206,818.05 | 90.3% |
| 1 | 2105 | காணி, காணி அபிவிருத்தி | 10,800,000.00 | 10,798,226.91 | 1,773.09 | 100.0% |
| 2 | 2105 | **பூச்செடியியல் அபிவிருத்தி** | **10,000,000.00** | **9,984,784.83** | **15,215.17** | **99.8%** |
| | | **உலர் வலய தா. பூ. அம்பாந்தோட்டை** | **74,200,000.00** | **73,205,401.71** | **994,598.29** | **98.7%** |
| 3 | 2102 | தளபாடம், அலுவலக உபகரணம் | 200,000.00 | 158,267.25 | 41,732.75 | 79.1% |
| 3 | 2103 | இயந்திரம், உபகரணம் | 1,000,000.00 | 967,214.10 | 32,785.90 | 96.7% |
| 3 | 2104 | கட்டிடம், கட்டமைப்பு | 44,000,000.00 | 43,095,051.73 | 904,948.27 | 97.9% |
| 3 | 2105 | காணி, காணி அபிவிருத்தி | 29,000,000.00 | 28,984,868.63 | 15,131.37 | 99.9% |
| | | **ஈர வலய தா. பூங்கா, அவிசாவலை** | 25,450,000.00 | 25,259,850.54 | 190,149.46 | 3.92 |
| 4 | 2102 | தளபாடம், அலுவலக உபகரணம் | 1,300,000.00 | 1,294,830.84 | 5,169.16 | 99.6% |
| 4 | 2103 | இயந்திரம், உபகரணம் | 1,300,000.00 | 1,230,023.75 | 69,976.25 | 94.6% |
| 4 | 2104 | கட்டிடம், கட்டமைப்பு | 5,000,000.00 | 4,887,601.23 | 112,398.77 | 97.8% |
| 4 | 2105 | காணி, காணி அபிவிருத்தி | 17,850,000.00 | 17,847,394.72 | 2,605.28 | 100.0% |
| 7 | 2105 | பசுமை இல்லப் பயிற்சி நிலையம், மீகல்லாவ | **6,000,000.00** | **5,981,508.35** | **18,491.65** | **99.7%** |
| **மொத்தம்** | | | **300,050,000.00** | **297,356,072.53** | **2,693,927.47** | **99.1%** |

## 5. 2017ம் ஆண்டில் தாவரவியல் பூங்காக்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்.

அனைத்துப் பூங்காக்களிலும் நில அலங்காரப் பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டதோடு, புதிய பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு, அடிப்பாதைகள், வீதிகள், பூங்காவின் பல பகுதிகள் ஆகியன செயற்றிறன் மிக்க வகையில் பேணப்பட்டு அனைத்துப் பூங்காக்களும் உயர் தரத்தில் முகாமை செய்யப்பட்டன.

### 5.1 அரச தாவரவியல் பூங்கா, பேராதனை




உள்ளக நிர்மாணப் பணிகள் இடம் பெறும் தாவரப் பேணகம்

| |
|---|
| அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு **:** கூட்டு நிதியம் ரூ.மில். **2.529*** |
| தா. பூ. நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூ.மில். **28.310*** |
| **2017ம்** ஆண்டின் செலவு : ரூ.மில். **30.775** |

*அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.


- நிர்மாணப்பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள தாவரப் பேணகத்தின் உள்ளக நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அது 2018ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பொது மக்களுக்காகத் திறந்து வைக்கப்படவுள்ளது.



பூங்காவின் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள்

- பூங்காவின் உள்ளக வீதிக்கட்டமைப்பு, வடிகான்கள் மற்றும் நீர்ப்பாசனத் தொகுதிகள் மேம்படுத்தப்பட்டதோடு கட்டிடங்களும் திருத்தப்பட்டு பூங்காவுக்குப் புதுப் பொலிவு வழங்கப்பட்டது. பூங்காவின் பிரதான பாதைகள் காபட் இடப்பட்டு மேம்படுத்தப்பட்டன.
- பூங்காவின் பிரதான வீதிகளை மேம்படுத்துமுகமாக அவற்றுக்குக் காபட் இடப்பட்டன. .
- பூங்காவின் கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கான பொறிமுறையொன்றை நிர்மாணிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, அதற்குத் தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.
- புதிய உத்தியோகபூர்வ வாசஸ்தல நிர்மாணப் பணிகள் நிறைவடைந்ததோடு, பூங்காவின் ஏனைய உத்தியோகபூர்வ அலுவலர் வாசஸ்தலங்களது திருத்த வேலைகளும் நிறைவு செய்யப்பட்டன.


- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டது, தாவரப் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 142,127 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.



**கழிவு முகாமைக்காக பூங்காவினுள் வைக்கப்பட்டிருக்கும் குப்பைத் தொட்டிகள்**

- பூங்காவின் தாவரச் சேகரிப்புக்கு பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டதோடு விஷேட தாவரங்கள் குறித்த விபரமான பெயர்ப் பலகைகளும் வீதிப் பெயர்ப் பலகைகளும் பொருத்தப்பட்டன. அவ்வாறே ஞாபகார்த்த மரச் சேகரிப்பிற்கான தாவர பெயர்ப் பலகைகளும் பொருத்தப்பட்டன.

- பூங்காவின் மரச் சேகரிப்பில் நான்கு அலகுகளது (O, P, H, B) தாவரங்கள் முழுமையாக மீள் கட்டமைக்கப்பட்டு வருகின்றன. பறவைகளையும் வண்ணத்துப் பூச்சிகளையும் கவரும் தாவரச் சேகரிப்புக்களை பூங்காவில் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.



**பூங்காவினுள் அமைக்கப்பட்டிருக்கும் வீதிப் பெயர்ப் பலகைகள்**

- பார்வையாளர்களுக்குத் தேவையான தகவல்களை உள்ளடக்கிய பிரசுரங்கள், விபரப் பலகைகள் ஆகியன தயாரிக்கப்படுகின்றன. வருகை தரும் பார்வையாளர்களுக்கு பூங்கா பற்றிய தகவல்களை வழங்கவென பூங்காவை சுற்றிப் பார்ப்பதற்கான வழிகாட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, இத்தகைய நிகழ்ச்சிகள் 40 நடாத்தப்பட்டு 1733 பேருக்கு இச்சேவை வழங்கப்பட்டது.

## 5.2 ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா, கம்பஹா

| | |
|---|---|
| அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு : கூட்டு நிதியம் ரூ.மில். **16.55** | |
| | தா. பூ. நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூ.மில். **17.25*** |
| **2017**ம் ஆண்டின் செலவு : ரூ.மில். **32.566** | |

*அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

- பூங்காவின் புற அழகை மேம்படுத்தும் நோக்கில் அதன் கட்டிடங்கள், வாசஸ்தலங்கள், தாவர இல்லம், சுற்று மதில், வசந்த இல்லங்கள், நிழல் இல்லங்கள் ஆகியன திருத்தியமைக்கப்பட்டதோடு, பூங்காவை உயர் மட்டத்தில் பேணும் பொருட்டு நில அலங்கரப் பணிகளும் ஏனைய பேணுகை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.
- பூங்காவுக்கு வாகனம் நிறுத்துமிடமொன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. .
- பூங்காவுக்கு புதுப் பொலிவை வழங்கும் பொருட்டு நுழைவுச்சீட்டுக் கருமபீடமும் அதற்கு அண்மையில் அமைந்துள்ள காவலரணும் திருத்தியமைக்கப்பட்டன.
- பூங்காவின் காரியாலயத்துக்கு முன்னாலுள்ள சுற்று வட்டப் பாதை புனரமைக்கப்பட்டது.
- பூங்காவின் பிரதான உத்தியோகபூர்வ இல்லம் திருத்தியமைக்கப்பட்டதோடு பாதுகாப்பு மதிலின் ஒரு பகுதி புனர் நிர்மாணம் செய்யப்பட்டது.
- பார்வையாளர்களின் பாவனைக்காக புதிய கழிவறைத் தொகுதியொன்றும் நிர்மாணிக்கப்பட்டது.
- பூங்காவின் ஊழியர்களுக்கான வசதிகளை மேம்படுத்துவதற்குத் தேவையான இருமாடிக் கட்டிடமொன்றின் முதலாம் கட்ட நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. அது ஊழியர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்கவும் கருவிகள் உபகரணங்கள் போன்றவற்றை சேமித்து வைக்கவும் பயன்படுத்தப்படும்.



**நிர்மாணிக்கப்பட்டு வரும் ஓக்கிட் இல்லம்**



**புனரமைக்கப்பட்ட பாதுகாப்பு மதில்**

- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டு, தாவரப் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 56,875 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. பூங்காவின் தாவரச் சேகரிப்புக்கு பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டன.



பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள பூ சேகரிப்பு மாதிரிகள்

- பார்வையாளர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கான தகவல் நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்குத் தேவையான தகவல்களை உள்ளடக்கிய பிரசுரங்கள், விபரப் பலகைகள் ஆகியன தயாரிக்கப்பட்டன.

- பூங்காவுக்கான பார்வையாளர் வருகையை அதிகரித்துக்கொள்ளும் நோக்கில் மக்கள் பார்வைக்காக ஓக்கிட் தாவர இல்லமொன்றினை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதன் 90% வேலைகள் தற்போது நிறைவடைந்துள்ளன. இது தொடர்பான ஆலோசனை சேவைகளும் நிர்மாணப் பணிகளும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக பொன்சாய்த் தாவரச் சேகரிப்பொன்றை அமைத்து மக்களின் பார்வைக்காக திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

- பூங்கா அமைந்துள்ள காணியை அண்மித்துப் பாய்கின்ற அத்தனகலு ஓயாவின் கரை அரிப்புக்குள்ளாவது அதிகமாகையால் பூங்கா அமைந்துள்ள காணி அரிப்புக்குள்ளாகும் ஆபத்துக்கு உட்பட்டுள்ளது. அதனைத் தடுக்குமுகமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன,

- பூங்காவின் அழகை மேம்படுத்தும் பொருட்டு சாடியிலிடப்பட்ட பூக்கன்றுகளை பல்வேறு மாதிரிகளில் அமைத்து மக்கள் பார்வைக்காக வருடம் முழுதும் பேணி வர நடவடிக்கை எடுக்கப்பட்டன.

## 5.3 ஹக்கல தாவரவியல் பூங்கா

அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு : கூட்டு நிதியம் ரூ.மில். **3.941**

தா. பூ. நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூ.மில். **35.911***

**2017ம்** ஆண்டின் செலவு : ரூ.மில். **39.819**

*அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

- பூங்காவின் வெளித் தோற்றத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அதன் கட்டிடங்கள், வாசஸ்தலங்கள், தாவர இல்லங்கள், வசந்த இல்லங்கள், சுற்றுலா விடுதி மற்றும் வேறு அங்கங்கள் நிறம் பூசப்பட்டு திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன.
- தற்போதுள்ள உத்தியோகத்தர் வாசஸ்தலங்களுக்கு மேலதிகமாக புதிதாக 4 வாசஸ்தலங்கள் கொண்ட வீட்டுத் தொகுதி ஒன்றின் முதலாம் கட்ட நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.
- புதிய கழிவறைத் தொகுதியொன்றை நிர்மாணிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. பூங்காவின் கழிவறைத் தொகுதிகளை சிறந்த முறையில் பேணும் பொருட்டு பேராதனை பல்கலைக் கழக நிபுணர்கள் குழுவொன்றின் ஆலோசனைப் படி கழிவு நீர்க்குழிகள் 02 புதிதாக அமைக்கப்பட்டன.
- பூங்காவைச் சுற்றிய பாதுகாப்பு வேலியின் ஒரு பகுதி நிர்மாணிக்கபப்ட்டது.
- பூங்காவின் கழிவு முகாமைச் செயன்முறையை பலப்படுத்தும் நோக்கில், கழிவுகளை சேகரித்து, வேறாக்கி களஞ்சியப்படுத்தவென மத்திய நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டது.



**அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய நுழைபாதை**



**கழிவு முகாமைத்துவ நிலையம்**

- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டு, தாவரப் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும் இப்பூங்காவில் 128,789 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. தேவையான பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டன.



**பூங்காவின் பூமி அபிவிருத்திப் பணிகள்**

- பார்வையாளர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கான பிரசுரங்கள், விபரப் பலகைகள் ஆகியன தயாரிக்கப்பட்டு அச்சுப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

- பூங்காவின் புதிய நுழைவாயில் அருகே வாகனம் நிறுத்துமிடம் ஒன்றை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அங்கு மண் தொடர்பான தொழில்நுட்பப் பிரச்சினைகள் ஏற்பட்டமையால் அதனை நிறுத்த வேண்டி ஏற்பட்டது. உரிய தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்று அடுத்த வருடம் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.
- பூங்காவின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு நில அபிவிருத்திப் பணிகளும் ஏனைய பேணுகை நடவடிக்கைளும் மேற்கொள்ளபப்ட்டன.

- பூங்காவின் பாதைகளின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு கற்கள் இடப்பட்டதோடு புதிய நுழைவுப் பாதியின் உட்பகுதி ஒழுங்கமைக்கப்பட்டது.

- பூங்காவின் புதிய நுழைவுச்சீட்டுக் கருமபீடத்தின் பாதுகாப்புக்காக “சேன்லிங்க்“ வேலி அமைக்கப்பட்டது.

## 5.4. கனேவத்த மூலிகைப் பூங்கா

அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு : கூட்டு நிதியம் ரூ .மில். **9.25**

தா. பூ. நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூ .மில். **0.71***

**2017ம்** ஆண்டின் செலவு : ரூ.மில். **9.943**

*அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

- பூங்காவின் புற அழகை மேம்படுத்தி அதன் கட்டிடங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்கள் சிறந்த முறையில் பேணப்பட்டு பூங்கா உயர் மட்டத்தில் பேணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.





**நீரில் வளரும் மூலிகைகளின் சேகரிப்புக்காக அமைக்கப்பட்ட குளம்**

- பூங்காவில் தாவர வளர்ப்புச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு 27,318 க்கும் மேற்பட்ட கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. வருட ஆரம்பம் முதலே அதிக வறட்சி நிலவியமையால் தாவரச் சேகரிப்புக்களை புதிதாக உருவாக்க முடியவில்லையாயினும் ஏற்கனவே இருந்த தாவரச் சேகரிப்புக்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.



திருத்தியமைக்கப்பட்ட தாவர இல்லம்

- பார்வையாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் தேவையான குடிநீர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டதோடு ஆசனங்களும் அமைக்கப்பட்டன.

- கன்றுகளை சாடிகளில் இடுவதற்கான தலங்கள் 02 அமைக்கப்பட்டன.

- தாவரக்கயப் பகுதியின் கூரை உட்பகுதி திருத்தியமைக்கப்பட்டதோடு தாவர இல்லமும் நவீனமயப்படுத்தப்பட்டது.



பூங்காவில் அமைக்கப்பட்ட ஆசனங்கள்

- சுதேச மருத்துவப் பெறுமதி வாய்ந்த உணவு, பானங்களின் விற்பனைக்கென நிர்மாணிக்கப்பட்ட உணவகம் பொதுமக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

- மூலிகைகள் பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2,416 பேருக்கு மூலிகைப் பாவனை, அவற்றின் பெறுமதி மற்றும் பேணுகை பற்றி விரிவுரைகள் நடாத்தப்பட்டன. பார்வையாளர்கள் மூலிகைகள் பற்றிய தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள உதவும் தகவல் பிரசுரங்கள் 15 க்கும் விபரப் பலகைகள் 25 க்கும் தேவையான தகவல்கள் திரட்டப்பட்டு அவை தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டன.



மூலிகைகள் பற்றி அறிவூட்டும் விரிவுரையொன்று

- வறட்சி காலத்தில் பயன்படுத்தவென மழை நீரைச் சேகரிக்கும் இடமொன்று அமைக்கப்பட்டது.

- பூங்கா ஊழியர்களுக்காக கள அலுவலகமொன்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

- நீரில் வளரும் மூலிகைகளின் சேகரிப்புக்காக குளமொன்று அமைக்கப்பட்டதோடு நில அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

## 5.5 தாவரக்கயம் மற்றும் தாவர வகைப்படுத்தல் ஆய்வுகள்

| | |
|---|---|
| அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு : | தா. பூ. நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூ .மில். **4.85*** |
| **2017ம்** ஆண்டின் செலவு : | ரூ.மில். **4.841** |

*அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.




தாவரக்கயத்தினால் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்ட உயிரினப் பூகோள விஞ்ஞானம் பற்றிய ஒரு நாள் செயலமர்வு

- உயிரினப் பூகோள விஞ்ஞானம் பற்றிய ஒரு நாள் செயலமர்வொன்று உயிரின விஞ்ஞான நிறுவனத்துடன் இணைந்து அரச தாவரவியல் பூங்காவின் கல்வி நிலையத்தில் தேசிய தாவரக்கயத்தினால் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்டது. இங்கு உயிரினப் பூகோள விஞ்ஞானம் பற்றிய விரிவுரைகள் நடாத்தப்பட்டதோடு பிரயோக விளக்கங்களும் வழங்கப்பட்டன. பிரதானமாக பல்கலைக்கழக சமூகமும் ஏனைய சம்பந்தப்பட்ட துறையினரும் இதன் மூலம் அறிவூட்டப்பட்டனர். இதற்காக புளோரிடா பல்கலைக் கழக உயிரின விஞ்ஞான பீடத்தின் உயிரி விஞ்ஞான நூதனசாலையைச் சேர்ந்த கலாநிதி நிகோ செலினஸ் (Dr. Nico Cellines), தென்னாபிரிக்க க்வாஸூலு - நடால் (Kwasulu - Natal) பல்கலைக் கழக சிரேஷ்ட ஆய்வாளர் கலாநிதி ரொபர்ட் டக்லஸ் ஸ்டோன் (Dr. Robert Dauglas Stone) மற்றும் புளோரிடா பல்கலைக் கழக உயிரின விஞ்ஞான பீடத்தின் உயிரி விஞ்ஞான நூதனசாலையைச் சேர்ந்த திருமதி பிரபா அமரசிங்ஹ ஆகியோர் பங்களிப்புச் செய்தனர்.



தேசிய தாவரக்கயத்தினால் தேசிய சிவப்புத் தரவுப் புத்தகத்தைத் தயாரிப்பது பற்றிய கூட்டமொன்று

- உயிரினப் பல்வகைமை பேணல் மற்றும் தாவரக்கய தொழில்நுட்ப முறைகள் மற்றும் முகாமை பற்றிய 18 செயலமர்வுகள் 318 பாடசாலை மாணவர்களுக்கும், 448 பல்கலைக்கழக மாணவர்களுக்கும், அரச மற்றும் தனியார் துறை அதிகாரிகள் 143 பேருக்கும் நடாத்தப்பட்டன. அவ்வகையில் உயிரினப் பல்வகைமை என்றால் என்ன ?, உயிரினப் பல்வகைமையைப் பேணலின் முக்கியத்துவம் மற்றும் தாவரக்கயத்தின் பங்களிப்பு என்பன பற்றி விளக்கமளிக்கப்பட்டன. அத்தோடு புளோரிடா பல்கலைக் கழக மாணவர்கள் 25 பேருக்கு தாவரக்கயத்தின் வரலாறு மற்றும் செயற்பாடுகள் ஆகியன குறித்து விரிவுரையொன்றும் நடாத்தப்பட்டது.

- தாவரவியல் விஞ்ஞான ரீதியான தாவரக் கண்டாய்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதானமாக உலர் மற்றும் ஈர வலய, அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்களை இலக்காகக்கொண்டு இவ்வருட தாவரக் கண்டாய்தல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வகையில் 24 கள ஆய்வுகள் நடாத்தப்பட்டு பூக்கும் தாவர மாதிரிகள் 1,185ம் பன்னத்தாவர மாதிரிகள் 106ம் பாசித்தாவர மாதிரிகள் 47ம் சேகரிக்கப்பட்டன. இம்மாதிரிகளுள் அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்களை அடையாளம் காணும் பணி முன்னெடுக்கப்பட்டதோடு, அழிவுற்ற தாவர வகையைச் சார்ந்த ஒரு தாவர இனமும், அழிவுறும் ஆபத்துக்கு அதிகம் உட்பட்டுள்ள தாவரங்கள் 10ம், அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்கள் 80ம், எதிர்காலத்தில் அழிவுறும் ஆபத்துக்கு உட்பட முடியுமான தாவரங்கள் 129ம், அழிவுறும் ஆபத்துக்கு உட்படும் நிலையை அண்மித்துள்ள தாவரங்களும், 79ம் அடையாளம் காணப்பட்டன. தாவர வெளிவாரிப் பேணுகை முறைமைகளைப் பயன்படுத்தி தேவையான தாவரப் பேணுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, சேகரிக்கப்பட்ட மாதிரிகள் தேசிய தாவரக்கயத்தில் எதிர்கால ஆய்வுகளுக்காக சேமித்து வைக்கப்பட்டன.



பாடசாலை மாணவர்களுக்கான உயிரினப் பல்வகைமை பற்றிய நிகழ்ச்சியொன்று.

- இத்தாவரவியல் விஞ்ஞானத் தாவரக் கண்டாய்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டபோது ரூமஸ்ஸல பிரதேச ஆய்வில், 2012ம் ஆண்டின் சிவப்புத் தரவுப் பட்டியலில், அழிந்து விட்ட தாவரம் எனக் குறிப்பிடப்பட்ட *Rinorea bengalensis* தாவரம் கண்டுபிடிக்கப்பட்டது. தாவரவியல் விஞ்ஞானத் தாவரக் கண்டாய்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு மேலதிகமாக அரிய மூலிகைத் தாவரங்களைக் கண்டறிவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றும் பேராதனை அரச தாவரவியல் பூங்காவோடு இணைந்து முன்னெடுக்கப்பட்டது. அதன் போது 42 அரிய மூலிகை வகைகள் சேகரிக்கப்பட்டு, பேணுகை நடவடிக்கைகளுக்காக அவை கனேவத்த மூலிகைப் பூங்காவுக்குக் கையளிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கனேவத்த மூலிகைப் பூங்காவின் தாவரச் சேகரிப்பை மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.



ரூமஸ்ஸல பிரதேசக் கள ஆய்வில், கண்டுபிடிக்கப்பட்ட, 2012ம் ஆண்டின் சிவப்புத் தரவுப் பட்டியலில் அழிந்து விட்ட தாவரம் எனக் குறிப்பிடப்பட்ட *Rinorea bengalensis* தாவரம்

- பாசித் தாவரப் பேணுகை நிகழ்ச்சித் திட்டமொன்றும் தாவரக்கயத்தினால் முன்னெடுக்கப்பட்டு கள ஆய்வுகளின் போது சேகரிக்கப்பட்ட பாசித் தாவர மாதிரிகளின் சேகரிப்பொன்று பேராதனை அரச தாவரவியல் பூங்காவில் ஸ்தாபிக்கப்பட்டது.

- தேசிய தாவரக்கயத்தினால் தேசிய சிவப்புத் தரவுப் புத்தகத்தைத் தயாரிக்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு பெரும் பங்களிப்புச் செய்யப்பட்டது. அதன் போது தாவர மாதிரிகளை மதிப்பீடு செய்தல், தகவல் சேகரித்தல் மற்றும் தாவரங்களின் பெயர்களை உறுதிப்படுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு மேலதிகமாக வெளியாருக்காக தாவரங்களின் பெயர்களை உறுதிப்படுத்தல், தாவர அடையாளம் காணல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டதோடு, இலங்கை பொலிஸ், நீதிமன்றங்கள் மற்றும் தேவையுடைய ஏனைய நிறுவனங்களுக்காகவும் இச்சேவைகள் வழங்கப்பட்டன.

- "Common Wayside Trees of Sri Lanka" என்ற புத்தகம் அச்சிட்டு வெளியிடப்பட்டது. அதில் 200 தாவர மாதிரிகளது புகைப்படங்களுடன் விஞ்ஞானத் தகவல்கள், பொதுப் பெயர், பாதுகாப்பு நிலை, வாசஸ்தலம் என்பன பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்தோடு அது சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் தகவல்களை உள்ளடக்கியுள்ளது.

- இலங்கையின் அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்கள், ஆக்கிரமிப்புத் தாவரங்கள், பன்னத் தாவரங்கள் மற்றும் கள ஆய்வுகளின் போது சேகரிக்கப்பட்ட அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்கள் ஆகியன பற்றிய பிரசுரங்கள், சுவரொட்டிகள் பிரசுரத்துக்காகத் தயார்படுத்தப்பட்டன. அதற்கு மேலதிகமாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, உலகப் பிரசித்தி பெற்ற ஹரமானிஸ் டீ. அல்விஸ் தாவரப் படங்களின் சேகரிப்பை பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு எதிர்வரும் வருட ஆரம்பத்தில் அது பிரசுரிக்கபப்டும். அதில் அழகிய தாவரப் படங்கள் 184 அத்தாவரங்கள் பற்றிய விபரங்களுடன் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- மத்திய மாகாணத்தினுள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களது பாசித் தாவரங்களது பல்வகைமையைக் காட்டும் விஞ்ஞான சுவரொட்டியொன்று தயாரிக்கப்பட்டு சர்வதேச கருத்தரங்கொன்றில் (27 வது ஆசிய பசுபிக் வன விஞ்ஞான ஆணைக் குழு) காண்பிக்கப்பட்டது.

- தேசிய தாவரக்கயத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள வரைபடங்கள் மற்றும் மாதிரிகளது எண்ணிக்கையை நிர்ணயித்துக்கொள்ளும் பொருட்டும் ஆய்வுப் பணிகளை இலகு படுத்தும் நோக்கிலும் அம்மாதிரிகளுக்கு நுழைவு எண்களை (Accession number) வழங்கி அவற்றை தரவு முறைமையொன்றிற்கு உட்புகுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தேசிய தாவரக்கயக் கட்டிடத்தின் கூரைத் திருத்த வேலைகள் முன்னெடுக்கப்பட்டதோடு, தாவரக்கயத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள மாதிரிகளை சிறந்த முறையில் பேணுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

## 5.6. தேசிய பூச்செடியியல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

| | |
|---|---|
| அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு : கூட்டு நிதியம் : ரூ. மில். **10** | |
| தா. பூ. நம்பிக்கை நிதியத்திலிருந்து : ரூ .மில். 24.626* | |
| **2017ம்** ஆண்டின் செலவு : ரூ.மில். **34.597** | |

*அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

சிறு மற்றும் நடுத்தர பூ வளர்ப்போரை பலப்படுத்தி அவர்களது பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக இவ்வருடமும் பூச்செடியியல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.



பூ வளர்ப்போருக்கான அறிவூட்டல் நிகழ்ச்சியொன்று

- நாடாளாவிய ரீதியில் பூச்செடியியலை விஸ்தரிக்குமுகமாக பூ வளர்ப்போர் சங்கங்கள் 185 செயற்படுவதோடு அவற்றினூடாக சுமார் 7500 பேர் நன்மையடைகின்றனர். அந்தூரியம், ஓக்கிட், ரோசா, ஜெர்பரா, வெட்டு இலைகள் மற்றும் இழைய வளர்ப்பு ஆகிய துறைகள் பற்றி 21,724 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது.
- பூ வளர்ப்போரது தொழில்நுட்ப மற்றும் ஏனைய திறமைகளை வளர்ப்பதற்காக 14 செயலமர்வுகள் நடாத்தப்பட்டு 1,059 பூ வளர்ப்போர் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- பூ வளர்ப்போரது உற்பத்திகளின் விற்பனையை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு சிற்றளவிலான கண்காட்சிகள் 322ம் மாவட்ட மட்டத்திலான பெரிய கண்காட்சிகள் 20ம் நடாத்தப்பட்டன. பூ வளர்ப்போரது 1514 நாற்று மேடைகளுக்கு சென்று களப் பிரச்சினைகளுக்கு தீர்வு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.



திருத்தியமைக்கப்பட்ட பிகோனியா தாவர இல்லம்

- இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைச் சபையின் ஒத்துழைப்புடன் 2017 ஒக்டோபர் 30ம் திகதி பூச்செடியியல் ஆராய்ச்சி சம்பந்தமான தேசிய மாநாடு நடாத்தப்பட்டது. அதன் போது பூச்செடியியல் துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் அத்துறையின் அபிவிருத்தி குறித்தும் 22 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

- நாட்டின் பூச்செடியியல் தொழிற்துறையை மேம்படுத்தும் பொருட்டு நிகழ்கால மற்றும் எதிர்கால களத் தேவைகளை ஈடு செய்யும் வகையிலான பல ஆய்வுகள் செய்யப்பட்டதோடு தற்போது பூ வளர்ப்போர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் பல ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. அத்தோடு வர்த்தக ரீதியிலான பூ வளர்ப்பு, நாற்று மேடை முகாமைத்துவம், நோய் மற்றும் பீடை முகாமைத்துவம் பற்றிய பிரச்சினைகளுக்கு தனிநபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் இலவச ஆலோசனைகள் வழங்கப்பட்டன.



**மலர்க் கண்காட்சியொன்று**

- களத்திலும் இரசாயனகூட வசதிகளின் கீழும் ஓக்கிட் கலப்பினங்கள் மற்றும் அந்தூரியம் வகைகளை உருவாக்குவது பற்றி ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
- அனைத்துப் பூங்காக்களதும் பூச்செடிச் செய்கை அலகுகளின் நாற்றுமேடைகள் உயர் தரத்தில் பேணப்பட்டதோடு, அவற்றின் அபிவிருத்திக்குத் தேவையான வளர்ப்பு ஊடகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. பேராதனை பூங்காவின் பிகோனியா தாவர இல்லம் பழுதுபார்க்கப்பட்டு மேம்படுத்தப்பட்டது. பேராதனை பூச்செடியியல் அலகின் ஆய்வு கூடமும் திருத்தியமைக்கப்பட்டது.
- பூச்செடியியல் மற்றும் தாவரங்கள் சம்பந்தமான தகவல்களை கொழும்புப் பிரதேச மக்களுக்கு வழங்கும் தகவல் நிலையமாக அபிவிருத்தி செய்யப்பட்ட நாரஹேன்பிட உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தின் கேட்போர்கூடத்தில், பூச்செடியியல் துறை மற்றும் தாவரங்கள் பற்றிய அறிவூட்டல் நிகழ்ச்சிகளும் பயிற்சி வகுப்புக்களும் நடாத்தப்பட்டு பூச்செடியியல் துறை மேம்பாட்டுக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவ்வகையில் அந்நிகழ்ச்சிகளிலிருந்து 488 பேர் பயனடைந்தனர்.



**பூ வளர்ப்போரை ஊக்குவிக்குமுகமாக நிழல் வலைகளை வழங்குதல்**

- பூச்செடியியல் துறையில் ஈடுபடும் பூ வளர்ப்போர் சங்கங்களது அங்கத்தவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கும் நோக்கில் நிழல் வலைகள், பொலித்தீன், பிளாஸ்டிக் பூச்சாடிகள் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டன.
- நாட்டின் பூச்செடியியல் தொழிலை மேம்படுத்தும் பொருட்டு நிகழ்கால மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதோடு, நடைமுறையில் பூ

வளர்ப்போர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆய்வுகள் சிலவும் மேற்கொள்ளப்பட்டன.

## 5.6.1. 2017 ம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்

1. 4 – 8 மாதங்கள் வயதுடைய மத்திம அளவிலான டென்ட்ரோபியம் ஓக்கிட்டின் வளர்ச்சிக்கான உரக் கலவை மற்றும் ஓமோன்களின் செல்வாக்கு பற்றிய ஆய்வு.
2. “Avo Red” அந்தூரியம் வகை பூப்பதனை மேம்படுத்துதற்கான உரக்கலவை மற்றும் அதனை இடும் முறையின் செல்வாக்கு பற்றிய ஆய்வு.
3. அந்தூரியம் மற்றும் அக்லோனிமா தாவரங்களின் வளர்ச்சி மற்றும் பூத்தலுக்கான நுண் மூலகங்களின் செல்வாக்கு குறித்த ஆய்வு.
4. நுனி அகற்றப்பட்ட Dracaena reflexa தாவரங்களில் புதிதாக வளரும் கிளைகளின் எண்ணிக்கை மற்றும் நீளத்தில் ஓமோன்களின் செல்வாக்கு குறித்த ஆய்வு.
5. ஒன்சீடியம் ஓக்கிட் பூ மஞ்சரியிலிருந்து (பூந்துணர்) இழைய முறை உருவாக்கம் செய்தல்.
6. மல்லிகை மற்றும் அலரிப் பூக்களை நீண்ட தூரத்துக்கு கொண்டுபோக்குவரத்து செய்தற்கான முறைமைகளைப் பரீட்சித்தல்.
7. “Pot puree” க்காக வாசனையுள்ள பூக்களை உலர்த்துவதற்கான முறைமைகளைப் பரீட்சித்தல்.

## 5.7. கல்வி மற்றும் பயிற்சி

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு | : | கூட்டு நிதியம் ரூ .மில். 0. 5 |
| | | தா. பூ. நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூ .மில். 2.25* |
| **2017**ம் ஆண்டின் செலவு | : | ரூ.மில். 2.743 |

*அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

பேராதனை தாவரவியல் பூங்காவின் கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தின் வசதிகள் மேம்படுத்தப்பட்டு திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன.



**ஓக்கிட் வளர்ப்புப் பற்றிய ஒரு நாள் அறிவூட்டல் நிகம்ச்சி**

- இளைஞர்கள் 120 பேர் நவீன பூச்செடிச் செய்கை முறைமைகள் மற்றும் நில அலங்கார முறைமைகள் பற்றி மூன்று மாத சான்றிதழ் பாடநெறியினூடு பயிற்றுவிக்கப்பட்டனர்.
- நில அலங்கார அபிவிருத்தி உதவியாளர்களுக்கான தேசிய தொழில் பயிலுனர் தகைமைச் சான்றிதழ் - 4ம் மட்டத்தினை (NVQ- level 4) வழங்கும் ஒரு வருட டிப்ளோமா கற்கை நெறிக்கு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதோடு 7 பேர் தம்மைப் பதிவு செய்து கொண்டு கற்கையைத் தொடர்கின்றனர்.

- ரோசா வளர்ப்பு, நாற்றுமேடை முகாமை, தாவர அடையாளம் காணல், தாவர சத்திர சிகிச்சைகள், பூ அலங்காரம், அறுவடைக்குப் பின்னரான தொழில் நுட்பம், நில அலங்காரம் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து 12,709 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது. மேலும் உயிரினப் பல்வகைமை மற்றும் அதனைப் பாதுகாத்தல் பற்றி பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 220 பேருக்கு அறிவூட்டப்பட்டது.



**திணைக்கள அதிகாரிகளுக்கு நடாத்தப்பட்ட தாவரக்கய தொழில்நுட்ப முறைகள் மற்றும் முகாமைத்துவம் பற்றிய நிகழ்ச்சி**


- திணைக்கள அதிகாரிகளது இயலுமை விருத்திக்குத் தேவையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டதோடு தேவையான சந்தர்பபங்களில் திணைக்களத்துக்கு வெளியிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.
- சிறார்களுக்கான நிகழ்ச்சியொன்று சர்வதேச சிறுவர் தினமான ஒக்டோபர் 01ம் திகதியன்று சுயாதீன தொலைக்காட்சியுடன் இணைந்து நடாத்தப்பட்டது.

## 5.8. மீகல்லாவ பசுமை இல்லப் பயிற்சி நிலையம்

| | |
|---|---|
| அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு : கூட்டு நிதியம் ரூ .மில். **6*** | |
| **2017ம்** ஆண்டின் செலவு : ரூ.மில். **5.982** | |

*அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

- 05ம் இலக்க கள அலுவலகக் கட்டிடத்தின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டன.
- தாவர வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு 37,970 கன்றுகள் உருவாக்கப்பட்டன.
- அத்தோடு கள நடவடிக்கைகளுக்குத் தேவையான இயந்திரங்களும் அலுவலக உபகரணங்களும் வேறு கருவிகளும் கொள்வனவு செய்யப்பட்டன.



**தாவர வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம்**

## 5.9. மிரிஜ்ஜவில, உலர் வலய தாவரவியல் பூங்கா, அம்பாந்தோட்டை

அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு : கூட்டு நிதியம் ரூ. மில். 74.2*

**2017ம்** ஆண்டின் செலவு : ரூ.மில். **73.205**

*அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

பூங்காவின் அடிப்படை மற்றும் பொதுமக்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.




**புதிய தெற்கு நுழைவாயிலுக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்ட வசந்த இல்லம்**

- தற்போதுள்ள பணியாளர் உத்தியோகபூர்வ இல்லங்கள் 03 க்கு மேலதிகமாக புதிதாக 04 இல்லங்கள் கொண்ட கட்டிடத் தொகுதி ஒன்றின் நிர்மாணப் பணிகள் இடம் பெற்று வருகின்றன. அதன் முதலாம் கட்ட நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன.
- பூங்காவினதும் பிரதேசத்தினதும் பூச்செடியியல் அபிவிருத்தியை இலக்காகக்கொண்டு பூச்செடியியல் கண்காட்சிகளை நடாத்துவதற்கான மத்திய நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டது. அதன் முதலாம் கட்ட நிர்மாணப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் எதிர் வரும் வருடம் மேற்கொள்ளப்படவுள்ளன.



**புதிய அலுவலகமும் தகவல் நிலையமும்**

- பூங்காவின் தாவர இனப்பெருக்க நடவடிக்கைகளுக்குத் தேவையான விதைகளை சேமித்து வைப்பதற்கான அறையொன்றை நிர்மாணிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.
- தாய்த் தாவரங்களின் சேகரிப்பொன்றை அமைப்பதற்குத் தேவையான நிழல் இல்லமொன்றை அமைக்கத் தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.




**பூச்செடியியல் கண்காட்சிகளை நடாத்துவதற்கான மத்திய நிலையம்** நிர்மாணிக்கப்பட்டது.

- பார்வையாளர்களின் பாவனைக்கென புதிய உணவகமொன்றின் நிர்மாணப் பணிகளும் உத்தியோகபூர்வ இல்லமொன்றின் நிர்மாணப் பணிகளும் இவ்வருடம் நிறைவு செய்யப்பட்டன.

- பூங்காவின் பாதைகளை மேம்படுத்தும் பொருட்டு அவற்றுக்கு காபட் இடப்பட்டன.

- பூங்காவுக்கான புதிய நுழைவாயில் நிர்மாணிக்கப்பட்ட பகுதியில் 02 வசந்த இல்லங்களும் முறையான பூங்காவில் 04 வசந்த இல்லங்களும் நிர்மாணிக்கப்பட்டன.




முறையான பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள வாடிகான்கள்

- பூங்காவின் நில அலங்கார வடிவமைப்பை மேம்படுத்த அலங்காரத் தாவரங்களைக் கொண்ட பூந்தோட்டங்கள், நடை பாதைகள், பாதைகள் மற்றும் ஏனைய பூங்காவியல் அம்சங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு கள அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.




புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 04 வாசஸ்தலங்கள் கொண்ட கட்டிடத் தொகுதியின் முதலாம் கட்ட நிர்மாணப் பணிகள் நிறைவுற்ற நிலையில்.

- பிரதேசத்தைச் சேர்ந்த பூ வளர்ப்போருக்கு வசதியளிக்கும் வகையில் பூங்காவின் பூச்செடியியல் அபிவிருத்திப் பணிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதோடு, பூச்செடியியல் விரிவாக்க அலுவலகத்தின் வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன. பிரதேசத்தைச் சேர்ந்த பூ வளர்ப்போரை ஊக்குவித்து அவர்களது இயலுமையை விருத்தி செய்வதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்கவென செயலமர்வுகளும் பயிற்சிச் செயலமர்வுகளும் நடத்தப்பட்டன.



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொற்று நீக்கல் அலகும் களஞ்சிய சாலையும்

- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டு, தாவரப் பேணுகை நடவடிக்கைள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 43,414 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

- புதிதாக அலுவலகமொன்றும் சிறிய தாவரக்கயமொன்றும் கூட்ட அரையொன்றும் வாசிகசாலையொன்றும் பார்வையாளர் மத்திய நிலையமொன்றும் தெற்கு நுழைவாயில் அருகே அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு முதலாம் கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

- பூங்காவின் மின் பாவனைக்காக செலவிடப்படும் பெருந்தொகைப் பணத்தை சேமித்துக்கொள்ளும் நோக்கில் சூரிய ஒளி மூலமான மின்சார பற்றரித் தொகுதியோன்றைப் பொருத்துவதற்கான கேள்வி மனுக்கள் கோரப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் அப்பணி நிறைவுறும்.




தெற்கு நுழைவாயில் அருகே பாதைக்கு காபட்

- பூங்காவுக்குத் தேவையான பெயர்ப் பலகைகள், விபரப் பலகைகள் மற்றும் வழிகாட்டிப் பலகைகள் ஆகியவற்றைப் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- பூங்காவின் மத்திய குளப் பிரதேசம் மற்றும் முறையான பூங்கா ஆகியவற்றின் கழிவு நீர் அகற்றலுக்கான வடிகான்கள் அமைக்கப்பட்டன.
- பூங்காவின் தெற்கு நுழைவாயில் பகுதியின் வாகனத் தரிப்பிட அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யபப்ட்டன.




பிரதேசத்தைச் சேர்ந்த பூ வளர்ப்போருக்கான இயலுமை விருத்திப் பயிற்சி நிகழ்ச்சியொன்று

## 5.10. சீதாவக ஈர வலய தாவாரவியல் பூங்கா, அவிசாவலை

| | |
|---|---|
| அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு : | கூட்டு நிதியம் ரூ .மில். 25.45 |
| | தா. பூ. நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூ .மில். 2.403* |
| **2017ம்** ஆண்டின் செலவு : | ரூ.மில். 27.663 |

*அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

பூங்காவினுள் பார்வையாளர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தவும் பேணுகை நடவடிக்கைகளை உயர் மட்டத்தில் மேற்கொள்ளவும் பூங்காவினுள் புதிய வசதிகளை ஏற்படுத்தவும் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.



குளத்துக்கு அண்மையில் அமைக்கப்பட்ட தோணித் துறை

- பூங்காவுக்கு வருகை தரும் பார்வையாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் குளத்துக்கு அண்மையில் தோணித் துறையொன்றும் இறங்கு துறையொன்றும் நிர்மாணிக்கப்பட்டன.

- ரோசாப் பூந்தோட்டம், ஜப்பான் பூங்கா, பன்னத் தாவரச் சேகரிப்பு ஆகிய இடங்களுக்கண்மையில் 03 வசந்த இல்லங்கள் நிர்மாணிக்கப்பட்டன.
- அழகிய சுற்றுச்சூழலினூடு பூங்காவின் உயர் பகுதியைப் பார்வையிடச் செல்லும் பாதையில் பார்வையிடும் தளமொன்றை நிர்மாணிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. இங்கிருந்து பார்க்கும் போது முழுப் பூங்காவினதும் அழகிய காட்சியைக் கண்டு களிக்க முடியும்.
- பூங்காவினுள் குடிநீர் வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதோடு, நீர்ப் பம்பி அறையின் திருத்த வேலைகள் நிறைவு செய்யப்பட்டன.
- பூங்காவைச் சூழ அமைக்கப்படவுள்ள பாதுகாப்பு வேலியின் ஒரு பகுதி நிறைவு செய்யப்பட்டது.
- புதிய கழிவறைத் தொகுதி ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டது.
- பூங்காவின் பூச்செடியியல் நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் அந்தூரியம் மற்றும் ஓக்கிட் நாற்று மேடைகளை உள்ளடக்கிய நிழல் இல்லம் பூங்காவின் தாவர நாற்று மேடை அமைக்கப்பட்டுள்ள இடத்துக்கு மாற்றப்பட்டது.
- பூங்காவின் நில அலங்கார வடிவமைப்பை மேம்படுத்த அலங்காரத் தாவரங்களைக் கொண்ட பூந்தோட்டங்கள், நடை பாதைகள் மற்றும் ஏனைய அம்சங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு கள அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டு, தாவரப் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 61, 248 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.



**ஜப்பான் பூங்காவுக்கருகில் அமைக்கப்பட்ட வசந்த இல்லம்**



**நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய கழிவறைத் தொகுதி**



**நில அலங்கார மேம்படுத்தல்**

- பூங்காவை பிரபலப்படுத்தும் நோக்கில் பாதைகளின் இரு மருங்குகளிலும் பொருத்துவதற்கான பெயர்ப் பலகைகள் தயாரிக்கப்பட்டு பொருத்தப்பட்டன.

- அனைத்துப் பூங்காக்களையும் செயற்றிறன் மிக்க வகையில் முகாமைத்துவம் செய்வதற்குத் தேவையான புதிய பொறிகள், இயந்திரங்கள், கருவிகள் மற்றும் பூங்கா உபகரணங்கள் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டதோடு, பாவனையில் இருக்கும் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் பூங்கா உபகரணங்கள் மேம்படுத்தப்பட்டு பூங்காக்களின் அலங்காரம் உயரிய முறையில் பேணப்பட்டன.

## 6. திணைக்களத்தின் ஏனைய அலகுகளின் முகாமை

### 6.1 அதிமேதகு ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதமர் ஆகியோரது உத்தியோகபூர்வ இல்லங்கள்

அதிமேதகு ஜனாதிபதி அவர்களது கொழும்பு 01, கண்டி, நுவரெலியா, அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகைகள், மாண்புமிகு பிரதமர் அவர்களது கொழும்பு அலரி மாளிகை மற்றும் நுவரெலியா வாசஸ்தலம் ஆகியவற்றின் பூங்காக்கள் சிறந்த முறையில் பேணப்பட்டன.

அதிமேதகு ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதமர் ஆகியோரது உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களது பூங்காக்களை அழகுபடுத்தி ஒழுங்குபடுத்துவதற்கென திட்டமிடப்பட்ட பிரகாரம் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

### 6.2 அனுராதபுர புனித வெள்ளரச மரம்

அனுராதபுர புனித வெள்ளரச மரத்தின் ஆரோக்கியம் பேணல் நடவடிக்கைகள் இவ்வருடமும் முன்னெடுக்கப்பட்டன.



**அனுராதபுர புனித வெள்ளரச மரத்தின் ஆரோக்கியத்தைப் பேணல்**

### 6.3. பொது நலவாய போர்ச் சமாதிகள் அலகு

கண்டி, ஜாவத்த, பொரல்ல, மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள பொது நலவாய போர் சமாதிகளது பேணுகைப் பணிகள் மற்றும் முகாமை நடவடிக்கைகள் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டன.



**ஜாவத்த பொது நலவாய போர்ச் சமாதிப் பூங்கா**

## 6.4. தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம்

இலங்கையின் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியம் என்ற பெயரில் அப்போதைய விவசாய, காணி மற்றும் வனவள அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 1995-12-15ம் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தை கருத்திற்கொண்டு 1996-02-07ம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியத்தை ஏற்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

தாவரவியல் பூங்காக்களுக்கான நுழைவுச் சீட்டு விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 25%த்தை வருடாந்தம், தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியத்திற்கான வருமானமாக ஒதுக்கீடு செய்யப்படும். நம்பிக்கை நிதியத்தின் குறிக்கோள்களாவன:

:

- இலங்கையிலும் வெளிநாடுகளிலும் எமது தாவரவியல் பூங்காக்கள் தொடர்பில் நிலவும் அபிப்பிராயங்களை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- கல்வியியல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் தாவரங்களைப் பாதுகாத்தல்.
- தாவரவியல் பூங்காக்களின் வசதிகளை மேம்படுத்துவதோடு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியுதவி வழங்குதல்.
- தாவரவியல் பூங்காக்களின் அபிவிருத்தி, தொழில்நுட்பக் கல்வியியல் மற்றும் பயிற்சி சார் செயற்பாடுகளை மேம்படுத்த நிதியுதவி வழங்குதல்.
- தாவரவியல் பூங்காவிற்கு வருகை தருகின்ற விஞ்ஞானிகளுக்கும் மற்றும் விஷேட பிரதிநிதிகளுக்கும் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதற்குத் தேவையான அவசர நிர்மாண மற்றும் பேணல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- திட்டமிடப்பட்ட விஷேட நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான மீண்டெழும் செலவினங்களை ஈடு செய்தல்.

இந்நிதியத்தின் நிதி உதவியின் கீழ் 2017ம் ஆண்டில் பூங்காக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு பூங்காக்களின் தரம் மேலாகப் பேணப்பட்டன.

2017ம் ஆண்டில் இந்நிதியத்தின் வருடாந்த மூலதன ஒதுக்கு 150 மில்லியன் ரூபாய்களாகும். பூங்காக்களின் அபிவிருத்திக்காக அதில் 149.8 (99.9 %) மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டது.

# 7. 2017ம் ஆண்டிலான பதவி உருவாக்கம், ஆட்சேர்ப்பு, இடமாற்றம், விடுவிப்பு, ஓய்வு பெறல் மற்றும் மரணம்

## 7.1. பதவி உருவாக்கம்

| பதவி | 2017ல் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| உதவிப் பணிப்பாளர் - திட்டமிடல் | 1 | 1 |
| கட்டண அறவீட்டு உதவியாளர் | 3 | 26 |
| பூங்கா தொழிலாளர் | 160 | 563 |
| களஞ்சியப் பொறுப்பாளர் | 2 | 5 |
| டிரக்டர் ஓட்டுனர் | 3 | 6 |
| பெகோ ஓட்டுனர் | 1 | 1 |
| பற்றரி கார் ஓட்டுனர் | 19 | 19 |

## 7.2. பணியில் இணைத்துக்கொள்ளப்பட்டோர்

| பதவி | நிலவிய வெற்றிடங்கள் | 2017ல் இணைத்துக்கொள்ளப்பட்டோர் |
|---|---|---|
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 10 | 6 |

## 7.3. இடமாற்றம் பெற்றவர்கள்

| பதவி | திணைக்களத்துக்கு வந்தோர் | திணைக்களத்திலிருந்து வெளியில் சென்றவர்கள் |
|---|---|---|
| உதவிப் பணிப்பாளர் - திட்டமிடல் | 1 | - |
| கணக்காளர் | 1 | - |
| நிர்வாக அலுவலர் | 1 | 1 |
| நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | - | 1 |
| அபிவிருத்தி அலுவலர் | 1 | 1 |
| முகாமைத்துவ உதவியாளர் | 6 | 4 |
| சாரதி | 3 | 2 |
| அலுவலக உதவியாளர் | 3 | - |
| **மொத்தம்** | **16** | **9** |

## 7.4. விடுவிப்பு மற்றும் சேவையை விட்டுச்செல்லல்

| பதவி | விடுவிப்பு | சேவையை விட்டுச்செல்லல் |
|---|---|---|
| அபிவிருத்தி அலுவலர் | 1 | - |
| கட்டண அறவீட்டு உதவியாளர் | 1 | - |
| பூங்கா வேலை மேற்பார்வையாளர் | 1 | 1 |
| பூங்கா தொழிலாளர் | - | 3 |
| **மொத்தம்** | **3** | **4** |

## 7.5 ஓய்வு பெற்றோர் மற்றும் மரணித்தோர்

| பதவி | ஓய்வு பெற்றோர் | மரணித்தோர் |
|---|---|---|
| பூங்கா அபிவிருத்தி உதவியாளர் (விசேட) | 1 | - |
| பூங்கா அபிவிருத்தி உதவியாளர் / விவாசாய ஆலோசகர் | 3 | - |
| முகாமைத்துவ உதவியாளர் | 3 | - |
| கட்டண அறவீட்டு உதவியாளர் | - | 1 |
| சாரதி | 1 | - |
| காவலாளர் | 1 | - |
| பூங்கா தொழிலாளர் | 8 | 2 |
| **மொத்தம்** | **17** | **3** |

## 8. பணியாளர் பயிற்சி மற்றும் இயலுமை விருத்தி

### 8.1. பணியாளர்களுக்கான திணைக்களத்தின் மூலமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (வெளிநாடு)

| இல. | நிகழ்ச்சித் திட்டம் | நாடு | கால அளவு | வெளிநாடு சென்ற அலுவலர் |
|---|---|---|---|---|
| 1. | *Liriodendron* மற்றும் *Camphor* தாவரங்களது மரபணுப் பாவனை மற்றும் புதிய உற்பத்திகள் பற்றிய சர்வதேச பயிற்சிச் செயலமர்வு | சீனா | 22/07/2017 - 07/08/2017 | திரு. R.D. டோனில் குலரத்ன - பொறுப்பதிகாரி, ஹக்கல தாவரவியல் பூங்கா |
| 2. | 6 வது தென்கிழக்காசிய தாவரவியல் பூங்காக்கள் வலையமைப்புக் கருத்தரங்கு | வியட்நாம் | 24 -28 /04/ 2017 | திரு. E.M.S. ஏக்கநாயக்க - பொறுப்பதிகாரி, மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்கா |
| 3. | முகாமைதத்துவம் பற்றிய சர்வதேச பயிற்சிச் செயலமர்வு | தாய்லாந்து | 19 – 26 /03/2017 | திரு. M.T.U. டி மெல், . பிரதம கணக்காளர், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் |
| 4. | தாவரவியல் விஞ்ஞான ஆய்வுகளில் தாவர வகைப்படுத்தல் அடிப்படைகள் மற்றும் கருவிகள் பற்றிய பயிற்சிச் செயலமர்வு | ஐக்கிய இராச்சியம் | 05 – 13 / 03/ 2017 | திருமதி. N.P.T. குணவர்தன, விவசாய நடவடிக்கை அலுவலர், தேசிய தாவரக்கயம் |
| 5. | பொதுநலவாய போர் சமாதிகள் முகாமைதத்துவம் பற்றிய பயிற்சி நெறி | இந்தியா | 27/02/2017- 04/03/2017 | திரு. E.W.S.D.D. விஜேசேகர, பொறுப்பதிகாரி, உதவிப் பணிப்பாளர் அலுவலகம், நாரஹென்பிட |

## 8.2 பணியாளர்களுக்காக வெளி நிறுவனங்களால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (உள் நாடு)

| இல. | நிகழ்ச்சித் திட்டம் | நடந்த இடம் | திகதி | இலக்குக் குழு |
|---|---|---|---|---|
| 1. | தனிப்பட்ட கோவை பேணல் | திறன் அபிவிருத்தி நிதியம் (SDFL) | 2017.06.19 – 2017.06.20 | அபிவிருத்தி உதவியாளர்கள், அரச முகாமைத்துவ உதவியாளர்கள் |
| 2. | வாகன முகாமை | நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அபிவிருத்தி நிறுவனம் | 2017.06.28 | வாகனங்களுக்குப் பொறுப்பான அலுவலர்கள், வாகன விடயத்துக்குப் பொறுப்பான மேற்பார்வை அலுவலர்கள், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அலுவலர்கள் |
| 3. | வருடாந்த பொருட்கள் மீளாய்வு மற்றும் சொத்து நீக்கம் | திறன் அபிவிருத்தி நிதியம் (SDFL) | 2017. 06. 29- 2017.06.30 | களஞ்சிய முகாமை மற்றும் வருடாந்த பொருட்கள் மீளாய்வுக்குப் பொறுப்பான அலுவலர்கள். |
| 4. | அபாய மதிப்பீடு, கணக்காய்வுத் திட்டமிடல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு | நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அபிவிருத்தி நிறுவனம் | 2017.08.03 | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அலுவலர்கள் |
| 5. | துளி நீர்ப்பாசன முறைமை | சிடி கார்டன்ஸ் | 2017.08.26 | வீட்டுத் தோட்டம் செய்வோர், வீட்டுத்தோட்ட அலங்காரம் மற்றும் பயிற்சி நெறிகளை நடாத்துவோர் |
| 6. | தகவல் அறியும் சட்டம் | திறன் அபிவிருத்தி நிதியம் (SDFL) | 2017.10.26 | மேற்பார்வை முகாமையாளர்கள் |
| 7. | சிறந்த சேவைக்கான அரச துறையின் இயலுமை விருத்தி | இலங்கை அபிவிருத்தி மற்றும் நிர்வாக நிறுவனம் | 2017.10.20 | இலங்கை விஞ்ஞான மற்றும் இலங்கை கட்டிட நிர்மாண சேவைகளின் அலுவலர்கள் |

## 09. 2018 ம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம்

| செயற்திட்டம் / நடவடிக்கை | நிதித் தேவை (ரூ. மில்.) | நிதி மூலம் |
|---|---|---|
| **பேராதனை அரச தாவரவியல் பூங்கா அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்** | | |
| கட்டிடங்கள், உத்தியோகபூர்வ இல்லங்கள், இயந்திரங்கள் மற்றும் வாகனங்களை திருத்தியமைத்தல் | *6.60* | கூட்டு நிதியம் |
| புதிய கருவிகள், அலுவலக உபகரணங்கள், இயந்திரங்கள் கொள்வனவு | *5.30* | கூட்டு நிதியம் |
| ஊழியர்களுக்கான புதிய கழிவறை நிர்மாணம் | *0.40* | கூட்டு நிதியம் |
| பாதைகளின் இரு மருங்குகளிலும் பக்கக் கட்டுக்களை அமைத்தல் | *1.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| நிர்மாணிக்கப்பட்டுள்ள தாவரப் பேணகத்தின் உள்ளே மாதிரிகளை அமைத்தல் - II ம் கட்டம் | *5.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| கழிவு முகாமைத்துவத் தொகுதி நிர்மாணம் - II ம் கட்டம் | *2.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| தாவரச் சேகரிப்புக்களின் அபிவிருத்தி, வெளிவாரிப் பேணுகை | *4.90* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| CCTV கமெரா பொருத்துதல் | *3.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| தாவரங்களுக்கு பெயர்ப் பலகை இடல், விபரமான பெயர்ப் பலகைகளைப் பொருத்துதல் | *6.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| நாற்று மேடை அபிவிருத்தி | *5.50* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| குடிநீருக்காக புதிதாக நீர்த்தாங்கி ஒன்றை அமைத்தல் | *0.25* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| பெரிய பற்றரி கார் ஒன்றைக் கொள்வனவு செய்தல் | *3.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| வாகனம் நிறுத்தும் இடம் ஒன்றை நிர்மாணித்தல் | *0.70* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| தாவர விற்பனை நிலையத்தை அபிவிருத்தி செய்தலும் பூங்கா ஆசனங்களை அமைத்தலும் | *1.50* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| வாகனத் தரிப்பிடங்களின் அபிவிருத்தி | *5.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| காணி அபிவிருத்தியும் பேணுகையும் | *4.50* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| வழிகாட்டல் கையேடு மற்றும் தகவல் பிரசுரங்கள் அச்சிடல் | *2.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| செயலமர்வுகளும் வழிகாட்டல் நிகழ்ச்சிகளும் | *0.50* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| மா ஓயா நீர் விநியோக அபிவிருத்தி | *2.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| கொடிகள் மாடம் மற்றும் வாசஸ்தலங்களின் திருத்த வேலைகள் | *7.50* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| கஃபடேரியா உணவகத்தின் கழிவு நீர்த் தொகுதி அபிவிருத்தி மற்றும் கூரைத் திருத்தம் | *8.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| **மொத்தம்** | ***74.65*** | |
| **ஹக்கல தாவரவியல் பூங்கா அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்** | | |
| அலுவலர் வாசஸ்தலமொன்றை அமைத்தல் - II ம் கட்டம் | *9.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| உள்ளக வீதி அபிவிருத்தி | *10.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |

| செயற்திட்டம் / நடவடிக்கை | நிதித் தேவை (ரூ. மில்.) | நிதி மூலம் |
|---|---|---|
| விதைகளை சேமித்து வைப்பதற்கான அறையொன்றை அமைத்தல் | *8.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| தாவரச் சேகரிப்புக்களை அபிவிருத்தி செய்தாலும் தாவரப் பேணுகையும் | *4.50* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| தாவரங்களுக்கு பெயர்ப் பலகை இடல், விபரமான பெயர்ப் பலகைகளைப் பொருத்துதல் | *0.50* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| காணி அபிவிருத்தியும் பேணுகையும் | *8.50* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| வாகன நிறுத்துமிட அபிவிருத்தி | *10.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| சேன் லிங்க் வேலி அமைத்தல் | *10.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| பழைய வசந்த இல்லக் கூரைத் திருத்தம் | *0.50* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| கட்டிடங்கள், உத்தியோகபூர்வ இல்லங்கள், இயந்திரங்கள் மற்றும் வாகனங்களை திருத்தியமைத்தல் | *1.50* | கூட்டு நிதியம் |
| புதிய கருவிகள், அலுவலக உபகரணங்கள், இயந்திரங்கள் கொள்வனவு | *0.70* | கூட்டு நிதியம் |
| புதிய நுழைவாயில் பகுதியில் வசந்த இல்லமொன்றை அமைத்தல் | *1.60* | கூட்டு நிதியம் |
| தாவர விற்பனை நிலையமொன்றை அமைத்தல் | *1.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| **மொத்தம்** | ***65.80*** | |
| **கம்பஹா தாவரவியல் பூங்கா அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்** | | |
| கழிவு நீர் அகற்றல் தொகுதி மற்றும் கட்டிடத் திருத்தம் | *1.50* | கூட்டு நிதியம் |
| புதிய கருவிகள், அலுவலக உபகரணங்கள், இயந்திரங்கள் கொள்வனவு | *0.85* | கூட்டு நிதியம் |
| கள ஊழியர்களுக்கான வேலைத்தளமொன்றை அமைத்தல் - II ம் கட்டம் | *8.00* | கூட்டு நிதியம் |
| பழத் தோட்டத்தில் புதிய வசந்த இல்லமொன்றை அமைத்தல் | *1.00* | கூட்டு நிதியம் |
| அத்தனகலு ஓயா கரைப் பாதுகாப்பு | *4.00* | கூட்டு நிதியம் |
| தாவரச் சேகரிப்புக்களின் அபிவிருத்தியும் பேணுகையும் | *1.50* | கூட்டு நிதியம் |
| தாவர நாற்று மேடையைச் சுற்றி சேன் லிங்க் வேலி அமைத்தல் | *2.50* | கூட்டு நிதியம் |
| தாவரங்களுக்கு பெயர்ப் பலகை இடல், விபரமான பெயர்ப் பலகைகளைப் பொருத்துதல் | *1.00* | கூட்டு நிதியம் |
| காணி அபிவிருத்தியும் பேணுகையும் | *2.00* | கூட்டு நிதியம் |
| சூரிய ஒளி மூலமான மின்சாரத் தொகுதி அமைத்தல் - II ம் கட்டம் | *3.00* | கூட்டு நிதியம் |
| பாதுகாப்பு வேலிப் புனரமைப்பு | *3.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| மர வீட்டைப் புனரமைத்தல் | *1.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| ஓக்கிட் இல்ல நிர்மாணப் பணிகளை நிறைவு செய்தல் | *5.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| பூ மாதிரிகளை அமைத்தல் | *1.25* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| **மொத்தம்** | ***35.60*** | |
| **பூச்செடிச்செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்** | | |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, பூச்செடியியல் அலகின் இரசாயனகூடத்தின் பேணுகை | *5.00* | கூட்டு நிதியம் |
| பூச்செடியியல் பற்றிய பிரசுரங்கள், பத்திரிகைகள் வெளியிடல் | *1.00* | கூட்டு நிதியம் |
| கண்காட்சிகள் / ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் | *2.00* | கூட்டு நிதியம் |
| வளர்ப்பு ஊடகங்களை வழங்கி பூ வளர்ப்போரை ஊக்குவித்தல் | *15.00* | கூட்டு நிதியம் |
| கன்று நாற்று மேடைகளையும் நடுகைப் பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்தல் | *11.00* | கூட்டு நிதியம் |

| செயற்திட்டம் / நடவடிக்கை | நிதித் தேவை (ரூ. மில்.) | நிதி மூலம் |
|---|---|---|
| தாவர விற்பனைக்குத் தேவையான பொருள் கொள்வனவு | *3.00* | கூட்டு நிதியம் |
| சூரிய ஒளி மூலமான மின்சாரத் தொகுதி அமைத்தல் | *15.00* | கூட்டு நிதியம் |
| சுவஹஸ்மல் செவன சுற்றாடல் அபிவிருத்தி | *0.80* | கூட்டு நிதியம் |
| பயிற்சி வகுப்புக்கள் நடாத்துதல் மற்றும் அலகின் பேணுகை | *6.70* | கூட்டு நிதியம் |
| தாய்த் தாவரக் கொள்வனவு | *1.00* | |
| **மொத்தம்** | ***60.50*** | |
| **கனேவத்த மூலிகைத் தாவரப் பூங்கா அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்** | | |
| புதிய கருவிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் | *0.65* | கூட்டு நிதியம் |
| தாவரச் சேகரிப்புக்களின் அபிவிருத்தியும் பேணுகையும் | *1.0* | கூட்டு நிதியம் |
| தாவரங்களுக்கு பெயர்ப் பலகை இடல், விபரமான பெயர்ப் பலகைகளைப் பொருத்துதல் | *0.20* | கூட்டு நிதியம் |
| காணி அபிவிருத்தியும் வேறு பேணுகை நடவடிக்கைகளும் | *4.30* | கூட்டு நிதியம் |
| விரிவுரை மண்டபத்துக்கு அருகிலான கழிவு நீர் வடிகான் அபிவிருத்தி | *0.50* | கூட்டு நிதியம் |
| **மொத்தம்** | ***6.65*** | |
| **மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்கா அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்** | | |
| அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் | *2.00* | கூட்டு நிதியம் |
| பற்றரிக் கார் கொள்வனவு | *3.00* | கூட்டு நிதியம் |
| பூச்செடியியல் அலகினுள் ஊழியர்களுக்கான வசதிகள் கட்டிடமொன்றையும் களஞ்சியசாலையொன்றையும் அமைத்தல் | *3.00* | கூட்டு நிதியம் |
| புதிய அலுவலகக் கட்டிட நிர்மாணம் - II ம் கட்டம் | *13.00* | கூட்டு நிதியம் |
| அலுவலர் வாசஸ்தல நிர்மாணம் - II ம் கட்டம் | *9.00* | கூட்டு நிதியம் |
| பூச்செடியியல் கண்காட்சித் தள நிர்மாணம் - II ம் கட்டம் | *5.00* | கூட்டு நிதியம் |
| பாதை அபிவிருத்தி | *10.00* | கூட்டு நிதியம் |
| பூச்செடியியல் அலகின் இலத்திரனியல் தொகுதி அபிவிருத்தி | *1.50* | கூட்டு நிதியம் |
| கழிவு முகாமைத்துவத் தொகுதியொன்றை அமைத்தல் | *3.00* | கூட்டு நிதியம் |
| பூங்காவினுள் சிறார்களுக்கான பகுதியொன்றை அமைத்தல் | *1.00* | கூட்டு நிதியம் |
| தாவரச் சேகரிப்புக்களின் அபிவிருத்தியும் பேணுகையும் | *1.00* | கூட்டு நிதியம் |
| தாவரங்களுக்கு பெயர்ப் பலகை இடல், விபரமான பெயர்ப் பலகைகளைப் பொருத்துதல் | *0.50* | கூட்டு நிதியம் |
| காணி அபிவிருத்தியும் வேறு பேணுகை நடவடிக்கைகளும் | *6.50* | கூட்டு நிதியம் |
| அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதல் | *0.20* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| சூரிய ஒளி மூலமான மின்சாரத் தொகுதி அமைத்தல் | *2.55* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| பாதுகாப்பு வேலி அமைத்தல் | *2.00* | கூட்டு நிதியம் |
| ஆராய்ச்சி மத்திய நிலையத்தின் பணிகளை ஆரம்பித்தல் | *2.50* | கூட்டு நிதியம் |
| **மொத்தம்** | ***65.75*** | |
| **சீதாவக ஈர வலய தாவரவியல் பூங்கா அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்** | | |
| அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் | *3.00* | கூட்டு நிதியம் |
| தாவர நாற்று மேடைக்கு நிழல் இல்லமொன்றை அமைத்தல் | *3.00* | கூட்டு நிதியம் |
| பாதுகாப்பு கூடங்களை அமைத்தல் | *0.20* | கூட்டு நிதியம் |
| நீர்த்தாங்கி அமைத்தல் | *0.80* | கூட்டு நிதியம் |
| இலத்திரனியல் தொகுதி அபிவிருத்தி | *2.50* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| இடி தாங்கித் தொகுதியொன்றை அமைத்தல் | *3.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| குடிநீர்த் தொகுதி அமைத்தல் - II ம் கட்டம் | *2.00* | கூட்டு நிதியம் |

| செயற்திட்டம் / நடவடிக்கை | நிதித் தேவை (ரூ. மில்.) | நிதி மூலம் |
|---|---|---|
| தாவரச் சேகரிப்புக்களின் அபிவிருத்தியும் பேணுகையும் | *0.50* | கூட்டு நிதியம் |
| தாவரங்களுக்கு பெயர்ப் பலகை இடல், விபரமான பெயர்ப் பலகைகளைப் பொருத்துதல் | *0.10* | கூட்டு நிதியம் |
| வாகனம் நிறுத்துமிடம், களஞ்சியசாலை மற்றும் கள அலுவலக நிர்மாணம் | *5.00* | கூட்டு நிதியம் |
| பூச்செடியியல் அலகின் பாதை அபிவிருத்தி | *3.00* | கூட்டு நிதியம் |
| காணி அபிவிருத்தியும் பேணுகை நடவடிக்கைகளும் | *5.20* | கூட்டு நிதியம் |
| பூங்கா ஆசனங்களை அமைத்தல் | *0.30* | கூட்டு நிதியம் |
| சேன் லிங்க் வேலியை நீட்டுதல் | *3.50* | கூட்டு நிதியம் |
| **மொத்தம்** | ***32.10*** | |
| **மீகல்லாவ தாவரவியல் பூங்கா அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்** | | |
| நிழல் இல்லமொன்றை அமைத்தல் | *2.00* | கூட்டு நிதியம் |
| மீகல்லாவ பூங்காவைச் சுற்றி மின்சார வேலி அமைத்தல் | *1.50* | கூட்டு நிதியம் |
| தாவர விற்பனைக் கூடமொன்றை நிர்மாணித்தல் | *1.50* | கூட்டு நிதியம் |
| நீர் விநியோகத் தொகுதி ஒன்றை அமைத்தல் | *1.00* | கூட்டு நிதியம் |
| நடை பாதைகள், பாதைகள் மற்றும் காணி அபிவிருத்தி | *3.00* | கூட்டு நிதியம் |
| ஆசனங்கள் அமைத்தல் | *0.50* | கூட்டு நிதியம் |
| பழைய கட்டிடத்தின் திருத்த வேலைகளை நிறைவு செய்தல் | *0.50* | கூட்டு நிதியம் |
| **மொத்தம்** | ***10.00*** | |
| **தேசிய தாவரக்கய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்** | | |
| தாவரக் கண்டாய்தல் நிகழ்ச்சித் திட்டம் | *2.50* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| ஆய்வு மற்றும் தாவரக்கயப் பேணுகை நடவடிக்கைகள் | *1.90* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| பிரசுரங்களைத் தயாரித்தல், அச்சிடல் மற்றும் புத்தகக் கொள்வனவு | *1.10* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| செயலம்ர்வுகளும் கல்வி நிகழ்ச்சிகளும் | *2.50* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| இலக்கம் 02 ஆய்வு கூடத்தின் தாவரங்களுக்கு நிரல் குறியீடுகளை இடல், தாவரக்கய மாதிரிகளை டிஜிட்டல் மயப்படுத்துதல் | *5.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| புதிய அலுவலக உபகரணக் கொள்வனவு | *0.20* | கூட்டு நிதியம் |
| **மொத்தம்** | ***13.2*** | |
| **கல்வி மற்றும் பயிற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்** | | |
| பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தத் தேவையான வசதிகளை ஏற்படுத்தலும் பேணலும் | *2.00* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| திணைக்கள அலுவலர்களது இயலுமை விருத்திக்கான பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றச் செய்தல் (உள்நாடு / வெளிநாடு) | *2.50* | கூட்டு நிதியமும் தாவரவியல் பூங்காக்கள் நிதியமும் |
| **மொத்தம்** | ***4.50*** | |
| **பிரதான பணிமனையின் அபிவிருத்தி நடவடிக்கைகளும் தாவரவியல் பூங்காக்களது அலங்கார மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளும்** | | |
| பிரதான பணிமனையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் | *3.40* | கூட்டு நிதியமும் தாவரவியல் பூங்காக்கள் நிதியமும் |
| பூங்காக்களது அலங்கார மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள் | *15.15* | கூட்டு நிதியமும் |

| செயற்திட்டம் / நடவடிக்கை | நிதித் தேவை (ரூ. மில்.) | நிதி மூலம் |
|---|---|---|
| | | தாவரவியல் பூங்காக்கள் நிதியமும் |
| அலுவலக உபகரணக் கொள்வனவு | *0.40* | கூட்டு நிதியம் |
| **மொத்தம்** | *18.95* | |
| **முழு மொத்தம்** | ***387.70*** | |